தமிழாக்கம்

# Character Development

Berean Scripture Lessonson

# பொறுமை



# பொறுமை

## 1. பொறுமை என்ற கிறிஸ்தவ அடிப்படையான குணலட்சணத்தின் முக்கியத்துவம் என்ன?

யாக்கோபு 1:4 "நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாய் இருக்கும்படி, "பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது."

**R3090 (col.1 P2):-**

"நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல் , பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, "பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது." ஆம், இந்தப் பொறுமையானது சகல நல்ல குணங்களுக்கும் எளிதாக வழிவகுக்கும். ஏனெனில், மற்ற அனைத்து குணங்களையும், பொறுமையின் கிரியைகள் தொடர்ச்சியான சுயக்கட்டுப்பாடு மற்றும் ஒழுக்கத்தின் மூலமே வளர்ச்சியடைய முடியும். பொறுமையை செயலாற்றாமல் கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் ஒரு அடிக்கூட முன்னேற முடியாது. இந்த ஒரு குணமானது கிறிஸ்தவ குணலட்சணங்களுக்கு அழகு சேர்ப்பதாகவும், உலக மக்களின் நம்பிக்கையை ஜெயிக்ககூடியதாகவும், தேவனுடைய சத்தியத்தினால் ஊக்குவிக்கப்பட்டு கிருபை நிறைந்த அவரை மகிமைப்படுத்துகிறது. மனிதனுடைய அபூரணத்தைப் பூரணப்படுத்தவும், பலவீனங்களை மேற்கொள்ளவும் தெய்வீகக் குணங்களைப் பெற்றுக்கொள்ள நாம் படும் வேதனைகளைச் சகிக்கவும், நீடிய பொறுமையோடு கூடிய தாழ்மை மிக அவசியமானது. இது கோபங்களைத் தனித்து, இரக்கத்தைப் பெருகச்செய்யும். நீதி மற்றும் சத்தியத்தின் பாதையில் செல்ல தீவிரிக்கும். தன்னுடைய அபூரணத்தை உணர்ந்து மற்றவர்களுடைய குறைகளையும் அபூரணமானக் குணங்களையும் இரக்கத்தோடு மன்னிக்க நம்மை பக்குவப்படுத்தும்.

**R3059 (col.2 P3):-**

பொறுமையைக் குறித்து தேவனுடைய வார்த்தை அல்லது செய்தி என்னவெனில், "நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது." (யாக்கோபு 1:4) - தேவனுடைய இந்த வார்த்தை அவருடைய வாயிலிருந்து புறப்பட்டதன் நிமித்தம், இந்தத் தெய்வீக ஆலோசனை நாம் பூரணப்படுவதற்கு எவ்வளவு முக்கியமாக இருக்கிறது. தேவன் நமக்கு விதித்திருக்கும் அளவுகோலை எட்டிப்பிடித்து நம்முடைய விசுவாசத்தை நிரூபிப்பதற்கு முன்னமே ஆண்டவரிடத்தில் நாம் வைத்திருக்கும் விசுவாசத்தை வெளிப்படுத்தத் தேவையான சோதனைகளைப் பெற்றதாகக் கற்பனை செய்யலாம். ஆகவே நமக்குள் பொறுமை எவ்வளவு தேவை என்பதை தேவன் தெளிவாக விவரிக்கிறார் - "உங்களை சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்" (1 பேதுரு 4:12) நாம் காணக்கூடிய மற்றும் அனுபவிக்கும் பிரச்சனைகளில் பொறுமையாக இருக்கும் பட்சத்தில், சுவிசேஷ யுகத்தில் சபையாக அழைக்கப்படுபவர்களுக்குத் தேவன் கொடுக்கும் மகிமை, கனம் மற்றும் அழியாமையைப் பெறும் அளவிற்கு நம்மில் வளரக்கூடிய கிருபை, ஞானம் மற்றும் புரிந்துகொள்ளும் திறனை அவர் சுட்டிக்காட்டுகிறார். இந்தத் தகுதியை அனுபவிக்கும் ஒவ்வொருவரும், கட்டாயமாகப் பரிசோதிக்கப்பட்டு. முயற்சி செய்து தேவனிடத்தில் தங்களுடைய முழுக் கீழ்ப்படிதலையும் நீதியின் கோட்பாடுகளாகிய - நியாயம், சத்தியம், அன்பு மற்றும் கேள்விகளுக்கு அப்பாற்பட்ட சகலத்திலும் தங்களை நிரூபித்துக் காட்டுவது

மிக அவசியமானதொன்றாகும். நம்முடைய இரட்சிப்பின் அதிபதியோடு இராஜ்யத்தைப் பகிர்ந்துக் கொண்டு, சகலத்தையும் "ஜெயித்து" அனைத்தையும் சுதந்தரிக்கும் முன் நம்முடைய குணநலன்கள் மேற்கூறிய கோட்பாடுகளில் மிக உறுதிப்பட்டு, நிலைக்கவேண்டும். இரட்சிப்பின் அதிபதியைப் பூரணப்படுத்துவதற்கு சோதிக்கப்பட்டு, பாடுபட்டு நிரூபிக்க வேண்டியது அவசியமானால், கோபாக்கினையின் பிள்ளைகளாக அவருடைய சுத்த கிருபையினால் மட்டுமே நீதிமானாக்கப்பட்ட நாம் நிச்சயமாக தேவனுக்கு முன் நம்முடைய குணலட்சணங்களை நிரூபிக்க வேண்டியவர் களாகயிருக்கிறோம்.

**R 3200(Col.2):**

வரவிருக்கும் மகிமை அல்லது நம்முடைய குணலட்சணங்களின் நம்பிக்கை அனைத்தும் தேவனுடைய வாக்குறுதிகளை அஸ்திபாரமாகக் கொண்டிருக்கிறது. நாம் இந்தச் சத்தியத்தின் பரிட்சையை எந்தச் சூழ்நிலையிலும், எந்த நிலையிலும் விட்டுக்கொடுக்காமல், சத்தியத்தை வார்த்தையினால் மட்டும் அல்ல, ஆவியினாலும் அன்பினாலும் பற்றிக்கொள்ளக்கடவோம். ஏனெனில், இதுவே உண்மை. மேலும் இது அற்புதமும் மகிமையும் கூட. இந்தச் சத்தியத்தை நாம் பற்றிக்கொள்ளும் பொழுது யாரும் நம்மை திசைத் திருப்பிவிடாதபடிக்கும், நாம் அதை பற்றிக்கொள்ள தடை செய்பவர்களுக்கும் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். மேலும் தேவனுடைய வார்த்தைகளை நாம் பயன்படுத்தும் போது, நாம் வஞ்சிக்கப்பட்டு, நம்மை நாம் குருடாக்கிக்கொண்டு, நாமே நமக்கு தடை விதிக்காதபடிக்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நீடிய பொறுமையினால், நாம் கிறிஸ்துவின் குணலட்சணங்களை அப்பியாசப்படுத்துவது மட்டும் அல்ல, நாம் எதிர்நோக்கும் துன்பங்கள், சோதனைகள், வேதனைகள் அனைத்தையும் சந்தோஷத்துடன் சகிக்க வேண்டும். இதுவே நம்முடைய இறுதி பரிட்சைக்கு அனுமதிக்கும் தகுதியாகும். இதன் மூலம் நம்முடைய குணலட்சணங்கள் வளர்ச்சி அடையும் என்பதை நம்முடைய ஆண்டவர் மலைப் பிரசங்கத்திலே குறிப்பிடுகிறார். பொறுமையின்றி பூரண அன்பைப் பெற்றுக்கொள்ளவும், அதை தக்கவைத்துக் கொள்ளவும் முடியாது.

## 2. பொறுமை என்ற இந்த வார்த்தையின் பொதுவான முக்கியத்துவம் என்ன?

பொறுமையோடிருப்பவர்களின் உண்மையான பண்புகளும் குணங்களும் -

- **a.** வேதனை, துன்பங்கள் மற்றும் தொல்லைகள் அனைத்தையும் சகிக்க வேண்டும்.
- **b.** பரிவு, இரக்கம் காட்டுதல், மற்றவர்களை புரிந்துகொள்ளுதல்.
- **c.** தொடர்ந்து விடாமுயற்சியோடிருப்பது.
- **d.** எந்த ஒரு பதில் அல்லது முடிவுக்கும் பதற்றமின்றி பொறுமையோடு காத்திருப்பது.

**R2790 (col.2 P6):-**

பொறுமை என்ற வார்தையின் மேல் விசேஷித்த அழுத்தம் கொடுக்கப்படுவதைக் காண்கிறோம். இந்த வார்தையை நாம் ஆராய்ந்துப் பார்த்தல் இரண்டு வித்தியாசமான கிரேக்க வார்த்தைகள், பொறுமை என்ற ஒரே வார்த்தையாக மொழிபெயர்க் கப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் "மாக்குரோத்தூனியா" என்ற வார்த்தை (எபிரேயர் 6:12, யாக்கோபு 5:10, அப்போஸ்தலர் 26:3) பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வசனங்கள் பொறுமைக்குப் பொதுவான அர்த்ததைக் கொடுக்கிறது. ஏறக்குறைய புதிய ஏற்பாட்டில் முழுவதுமே இந்த வார்த்தை (மாக்குரோத்தூனியா) பயன்படுத்தப்படிருக்கிறது. (ரோமர் 2:4, 9:22, எபே 4:2, கொலோ 1:11, 3:12, 1 தீமோத்தேயு 1:16, 2 பேது 3:15) ஆனால் நம்முடைய

பாடத்திற்கு இந்தப் பதம் பயன்படுத்தப்படவில்லை. அதாவது வேதத்தில் பொதுவாக "பொறுமை" என்று பயன்படுத்தப்படும் வார்த்தையை இந்தப் பாடத்தில் நாம் எடுத்துக்கொள்வதில்லை. மாறாக "ஹீப்போனீ" என்ற மற்றொரு வார்த்தையை நாம் பாடத்திற்கு ஆதாரமாக எடுத்துக்கொள்ளுகிறோம்.

## 3. வேத வசனங்களில் விசேஷமாக வெளிப்படுத்தல் 3:10ல் மற்றும் லூக்கா 8:15ல் பயன்படுத்தப்பட்ட இந்த வார்த்தையின் ஆழமான முக்கியத்துவம் என்ன?

வெளி 3:10 "என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாக பூச்சக்கரத்தின் மேல்லெங்கும் வரபோகிற சோதனைக்காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்".

லூக் 8:15 "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்து பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்."

**R2790**

"அடிப்படைக் குணங்களில் ஒன்றானது பொறுமை"

சபை வரலாற்றில், பிலதெல்பியா சபைக்குச் சொல்லப்பட்ட ஒரு அறிவுரைப்பற்றி நாம் இன்று ஆராய்ச்சி செய்யப்போவதில்லை, மாறாக, இந்த வசனத்தில் உள்ள கோட்பாடுகளை நமக்குப் பொருத்தி, நாம் நம்மை ஆராய்ந்துப்பார்த்து, சுவிசேஷ யுகம் முழுவதிலும் தேவன் இந்தக் கோட்பாட்டுக்கு இசைவாக வழி நடத்தினதை நாம் இப்பொழுது பார்க்கப்போகிறொம். எந்தச் சூழ்நிலையிலும் சபை வரலாற்றில் பிலதெல்பியா சபைக்குக் கொடுத்த அறிவுரைகளை இந்த யுகத்திலும் நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டு தேவனை கனப்படுத்தி, அவருக்குப் பிரியமாக நடக்க வேண்டும்.

"பொறுமை" என்ற வார்த்தைக்கு விசேஷமான அழுத்தம் கொடுக்கப்படுகிறது. நாம் பார்த்தபடி இந்தப் பதத்தை இரண்டு வித்தியாசமான கிரேக்க வார்த்தைகளிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. "மாக்குரோத்தூனியா" (எபி 6:12, யாக் 5:12, அப் 26:3) மற்றும் "ஹீப்போமோனீ", "மாக்குரோத்தூனியா" இந்த வார்த்தையை நம்முடைய பொதுவான வாழ்க்கையில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. இதற்கு நீடிய பொறுமை என்று பொருள். ஆகவே இந்தக் கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் முழுவதிலும் பயன்படுத்தப்படுகிறது. (ரோமர் 2:4, எபே 4:2, கொலோ 1:11, 3:12, 1 தீமோ 1:16, 2 பேது 3:15) ஆனால் நாம் பார்க்கக்கூடிய வேதப்பகுதியில் இந்த ஒரு வார்த்தை மட்டும் பயன்படுத்தப்படுவதில்லை. பொதுவாக "ஹீப்போமோனீ" என்ற மற்றொரு வார்த்தையும் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது.

"ஹீப்போமோனீ" என்ற வார்த்தை இன்னும் பல ஆழமான முக்கியத்துவம் வாய்ந்த அர்த்தம் கொண்டுள்ளது. இது பொறுமையாக இருப்பதை மட்டும் குறிப்பிடாமல், தீமையை சந்தோஷத்தோடும், முழு விருப்பத்துடன் சகிப்பதை வலியுறுத்துகிறது. ஆகவே இது தற்காலிகமான உணர்ச்சிவசப்படக்கூடிய காரியமாக அல்ல, மாறாக, இது பொறுமையாகச் செயலாற்றுவான் *ஶ்ரீ* தன்னுடைய வாடிக்கையாளர்களோடு அவர்கள் தொடர்பு கொள்ளும் விதம், அவர்கள் எப்படியிருந்தாலும் அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாவதற்கு, மிக எச்சரிப்போடும் பொறுமையோடும் இருப்பார். ஆனால் நம்முடைய பாடப்பகுதிக்குள் வரும்

“பொறுமை” என்ற வார்த்தை இருதயத்திற்குள், குணங்களின் வளர்ச்சி அடைந்து தெய்வீகமான ஞானத்திற்கும், அன்புக்கும், தேவனுடைய சித்தத்திற்கும் எதிராக எந்த சூழ்நிலையிலும் செயல்படாமல், தேவன் குறித்தக் காலத்தில் இன்றைய தீமைகளை அகற்றிவிடுவார் என்ற நம்பிக்கையுடன், அதோடு போராடாமல், அதை பொறுத்துக்கொள்ளும் குணமாகும். நம்முடைய ஆண்டவரே பாராட்டத்தக்கதான இந்த ஒரு குணலட்சணத்தைக் கண்டு பிடித்து, நம்மில் எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்து இருக்கிறது என்று நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்பது நலமாக இருக்கும் என்று நம்புகிறோம். இந்த ஒரு குணத்தை அடிப்படையாக வைத்தே அவரைப் பின்பற்றுபவர்களை அடையாளம் கண்டுகொள்கிறார். ஆகவே இதில் நாம் வளர்ச்சி அடைந்து அவருடைய பூரணமான அங்கீகாரத்தைப் பெறுவோம்.

நாம் பார்த்துக் கொண்டிருக்கும் வேத பகுதியில் சொல்லப்பட்ட நீடிய பொறுமை, நம்முடைய ஆண்டவரின் வார்த்தை அல்லது உபதேசமாக இருப்பதினால், எழுதப்பட்ட சுவிசேஷங்களை நாம் சற்றுப் புரட்டி,, அவர் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறார் என்பதைப் பார்க்கலாம். அவர் இரண்டு முறைகள் இந்த வார்த்தையை உச்சரித்தார் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது - லூக் 8:15. விதைக்கிறவன் என்ற உவமையில் “ நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள், வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமயுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்” இங்கு பொறுமை என்பது மகிழ்ச்சி, சகிப்புத்தன்மை மற்றும் தொடர்ந்து உறுதியோடும் உண்மையோடும் நடப்பதைக் குறிக்கிறது. இந்த வார்த்தை இங்கு சொல்லப்படும் கருத்து என்னவெனில், தேவன் அங்கீகரித்து அவருடைய இராஜ்யத்தில் ஏற்றுக்கொள்ளும் கனி கொடுக்கும் வகுப்பார் இவர்களே. அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்வது மட்டும் பொருள் அல்ல, ஏனெனில், பாறையான நிலம் கூட கனி தரும் அளவுக்கு வசனங்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், சூரியக் கதிர்களால் உபத்திரவம் எழும்பும்போது அது பட்டுப்போனதாக வாசிக்கிறோம். ஆழமான மண் இல்லாததினால் இப்படி ஆயிற்று. ஆண்டவர் இதைக் குறித்து விவரிக்கும் பொழுது, பாறை மிகுதியாகவும், மண் குறைவாகவும் இருக்கும் இடங்களைக் குறிக்கும் இந்த வகுப்பார், மகிழ்ச்சியுடன் சத்தியத்தைக் கேட்டு உபத்திரவத்தின் காலத்தில் உறுதியாகவும், நீடிய பொறுமையோடும் நிற்க திராணியற்றவர்களாக விழுந்து போகிறவர்கள். எதையும் மேற்கொள்ள பொறுமை இல்லாத இவர்கள், தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது என்கிறார்.

## 4. நீடிய பொறுமை ஏன் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது?

### R2791 (col.2 P1,2)

தேவனுடைய இராஜ்யத்தில் அவருடைய குமாரனுக்கு உடன்பங்காளிகளாக அழைக்கப்படுகிறவர்களுக்கு இந்த ஒரு குணத்தையும் அடிப்படைத் தகுதியாக தேவன் வைத்திருக்கிறார் என்று நாம் பதில் அளிக்கலாம். நாம் செய்யக்கூடிய வேலைகளைக் குறித்து கவனிக்கும் பொழுது இதற்குள் இருக்கும் ஞானம் வெளிப்படுத்தப்படுகிறது. நம்முடைய ஆண்டவரின் உடன்பங்காளிகளாக அவரோடு தேவனுடைய ஆயிரவருட ஆட்சியில் பூமியின் முழு குடும்பங்களையும் ஆசீர்வதிக்க வேண்டிய வேலை கொடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு பெரிய வேலையாகும். ஆகவே இதற்குத் தகுதியான ஆட்களை மட்டுமே தேவன் தேர்வு செய்வார். தேவனுடைய குணங்களையும் நன்மைகளையும் அறிந்து. பாவத்தையும், அநீதியையும் வெறுத்தால் மட்டும் போதாது,

இவைகளின் கோட்பாடுகளுக்கு ஏற்றவாறு வாழ்க்கையில் நடை முறைப்படுத்த வேண்டும். நீதியினிமித்தம் சந்தோஷத்தோடு மனப்பூர்வமாகத் துன்பப்படும் போது, நீடிய பொறுமையோடு சகிக்க வேண்டும். தற்காலிகமாக, ஒரு சில சோதனைகள் மட்டுமே, ஒருவரை நீதியின் பாதையில் நடப்பவர் என்று நிரூபித்து விடாது. ஆனால் மரிக்கும் வரைக்கும் சந்தோஷத்துடன் பாடுகளைச் சகிப்பதனால் மட்டுமே நமக்குள் இருக்கும் நீடிய பொறுமையை நாம் நிரூபிக்கமுடியும்.

நாம் வைரத்தைக் கொண்டு இதை விளக்கலாம். பிளாஸ்டிக் பொருட்களைக் கொண்டு வைரத்தை உற்பத்தி செய்யலாம் என்ற பட்சத்தில், முடிந்த வரையில் வைரத்தைப் போலவே நாம் அந்த பிளாஸ்டிக்கை உருமாற்றினாலும், அதன் விலை வைரத்திற்கு ஒப்பாகுமா? அல்லது வைரத்தைப் போல மதிப்பு பெறுமா? நிச்சயமாக இல்லை. அதேபோல் ஒரு கிறிஸ்தவனும் தேவனுடைய குணலட்சணங்கள் பூரணமாக அடையாதிருந்தால் மட்டும் அவர் தேவ புத்திரனாக முடியும். விசேஷமாக இந்த “நீடிய பொறுமை” என்ற குணம் நம்மில் இல்லை என்றால், நிச்சயமாக நாம் அவருடைய பொக்கிஷமாகக் கருதப்பட வாய்ப்பில்லை. ஆகவே எந்தச் சூழ்நிலையிலும் உறுதியாக, துன்பங்களை சந்தோஷத்துடன் சகிக்கும் குணத்தை உடையவர்கள் மட்டுமே இராஜ்யத்திற்கு ஏற்றவர்களாக இருக்க முடியும் என நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார்.

## 5. நீடிய பொறுமைக்கும், சுய கட்டுப்பாட்டுக்கும் உள்ள தொடர்பு என்ன?

2 பேது 1:6 “ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும்..”

**R2037 (col.1 P7):-**

இந்த அறிவு, ஓர் உண்மையும், நன்மையுமான இருதயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டால், காலப்போக்கில் “சுய கட்டுப்பாடு” என்ற கனியைக் கொடுக்கும்.” தனக்குள் நம்பிக்கையாக இருப்பவன் தன்னை சுத்திகரித்துக் கொள்ளுகிறான். தன்னைத்தான் கட்டுப்படுத்தி பழைய புளித்த மாவை புறம்பே கழித்துப்போடுகிறான். “இப்படியாக நமக்குள் சுய கட்டுப்பாடு இருந்தால், நமக்குள் பொறுமை வளர்ச்சி அடையும். மற்றவர்களிடம் காட்டப்படும் இரக்கமும், பொறுமையுடன் நமக்குள்ளே வளர்ச்சி அடைய நாமே நமக்கு ஆசிரியர்களாக இருப்போம். இப்படிப்பட்ட பொறுமை, வளர்ச்சியடைந்தால், நம்மை அடுத்த மேன்மையான குணலட்சணமாகக் குறிப்பிடப்படும் அன்புடன் கூடிய தேவபக்தியை நமக்குள் அதிகரிக்கும். இந்த ஒரு நிலையில் அவருடைய சகல விதமான சிந்தைகளும், வார்த்தைகளும், கிரியைகளும் தேவனுடைய அன்பாக நம்முடைய இருதயங்களில் பொழியப்படும். இது நமக்குள் சகோதர சிநேகத்தை வளர்ச்சியடையச் செய்யும். தேவனுடைய அன்பில் நிலைநின்று, சத்தியம் மற்றும் நீதி என்ற அடிப்படையில் சகோதரர்கள் மேலும், அயலகத்தார் மேலும் சகோதர அன்பு அதிகரிக்கும். இப்படிப்பட்ட சகோதர அன்பு தேவனுடைய கிருபைகளை இன்னும் ஆழமாக புரிந்துகொள்வதற்கு வழிவகுத்து பிரதான குணமாகிய தெய்வீக அன்பை நமக்குள் நிலை நாட்டும். தேவன் பேரில் நாம் கொண்டுள்ள அன்பு, இது தூய்மையானதும், ஆழமானதும், உண்மையானதுமாக இருக்கும். இது எந்த விதமான தீமையையும் எண்ணாது. மற்றவர்களை எளிதில் குற்றம் சாட்டாது, எப்பொழுதும் சத்தியத்தில் மகிழ்ந்து கொண்டிருக்கும். இன்றைய காலகட்டத்தில், இதுவே ஒரு கிறிஸ்தவன் அடையும் உச்சக்கட்ட நிலையாகும். கிருபையின் மேல் கிருபை பெற்று, மங்காத அன்பில் வளர்ந்து உயிர்த்தெழுதலின்போது கிடைக்கப்பெறும் புதிய சரீரத்தில் பூரணப்படுவார்கள்.

## 6. நம்முடைய சோதனைகளை நாம் ஏன் பொறுத்துக் கொண்டு காத்துக்கொள்ள வேண்டும்?

லூக் 21:19 “உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்.”

**R2791 (1P4,5):-**

நம்முடைய ஆண்டவர் இந்த வார்த்தையை மற்றும் ஒரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்தியிருக்கிறார். (லூக் 21:19) சாத்தான் இந்த உலகத்தில் அதிபதியாக இருக்கும் பட்சத்தில், பாவத்தினால் கட்டப்பட்டிருக்கும்போது, இக்காலத்தில், அவருடைய சீஷர்களாக இருப்பதினால் வரும் விளைவுகளைப்பற்றி இயேசு சொல்லிக் கொண்டிருந்தார். இவர்கள் துன்பங்களையும், எல்லா திசைகளிலிருந்தும் வரும் எதிர்ப்புகளை சந்திக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார். ஆனால் இப்படிப்பட்ட துன்பங்களும் சோதனைகளும் அனுமதிக்கப்பட்டாலும், அவர்களுக்கு முழுமையான தெய்வீக பாதுகாப்பும், அரவணைப்பும் கொடுக்கப்படும் என்று எந்த ஒரு உறுதியும் கொடுக்கவில்லை. எல்லா சோதனைகளிலும் “உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்’ என்று சொன்னார்.

வருங்காலத்தில் நிறைவேறக்கூடிய தேவனுடைய கிருபையான வாக்குத்தத்தங்கள் மேல் நாம் வைத்திருக்கும் விசுவாசமும், நம்பிக்கையும் சாத்தானின் குருடாக்கப்பட்ட ஊழியக்காரர்களும், கள்ள சகோதரர்களும், இந்த உலகத்தில் நமக்கு எதிரிடையானவர்களும் நம்மை எதிர்த்து அவர்கள் வழிக்கு இழுத்துச் செல்லாதபடிக்கு அசைக்க முடியாத அளவுக்கு உறுதியாக இருக்க வேண்டும். தேவன் கட்டிக்கொண்டிருக்கும் மகிமையான ஆலயத்திற்கு ஜீவனுள்ள கற்களாக இருக்கும் நம்மை செதுக்கி, மெருகேற்றி சரியான இடத்தில் பொருத்துவதற்கு அவர் அனுமதிக்கும் சோதனைக்காக நாம் நித்தமும் மகிழுவோம். இந்த ஒரு கோணத்திலிருந்து நாம் நம்முடைய சோதனைகளைக் கண்ணோக்கினால், உண்மையில் நம்முடைய ஆத்துமாவைக் காத்துக்கொண்டு, எல்லாவிதமான உபத்திரவங்களிலும் மகிழ்ச்சியாக இருக்கலாம். ஆம், நாம் முடிவு பரியந்தம் தேவனிடத்தில் விசுவாசமாக இருந்து, எதையும் எதிர் நோக்கக்கூடிய மனநிலையைப் பெற்றிருந்தால், மாம்சத்தில் படும் பாடுகளும், உபத்திரவங்களும், மனிதர்களின் எதிர்ப்புகளும், இந்த ஆத்துமாவுக்கு தேவன் கொடுத்த அநேக விலையேறப்பெற்ற வாக்குறுதிகளைச் சுதந்தரிக்க என்றுமே தடை செய்யாது என்பதை நாம் முதலில் உணரவேண்டும்.

## 7. விசுவாசத்திற்கும் நீடிய பொறுமைக்கும் உள்ள தொடர்பு என்ன?

யாக்.1:3 “விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோசமாக எண்ணுங்கள்.”

**R2792 (col.1P2) :-**

பொறுமை, நீண்ட காலம் பொறுத்துக்கொள்வது பற்றிய முக்கியக் காரியங்களை நாம் பரிசீலிப்பது நமக்கு மிகவும் உதவியாக இருக்கும். ஆகவே புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தை எப்படியாகப் பயன்படுத்தப்படுகிறது என்று பார்ப்போம். “ நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டத்தை பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாக இருக்கிறது.” (எபி 10:36) என்று பவுல் குறிப்பிடுகிறார்.

தேவனுடைய சித்தத்தை செய்வதே நமக்கு சோதனை என்று பொருள் அல்ல. ஆனால் அந்தக் கட்டத்தை எட்டிப்பிடித்து விட்டால், நம்முடைய இருதயங்களிலும், சிந்தைகளிலும், தேவனுடைய நீதி நிலையாக ஸ்தாபிக்கப்படும் வரைக்கும் பொறுமையோடு காத்திருக்க வேண்டும். அப்போது நாம் எந்தச் சூழ்நிலையிலும் அந்த நீதியில் நிலைத்திருந்து, தேவனுடைய இராஜ்யத்திற்கு ஏற்ற மனநிலையைப் பெறுவோம். “உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.” (யாக் 1:3) என்று யாக்கோபு குறிப்பிடுகிறார். சொல்லப்போனால், நம்முடைய சோதனைகளில், விசுவாசத்தில் நிலைத்திருந்தால், நமக்குள் நீடிய பொறுமையை உருவாக்கும். அடுத்து, இந்த நீடிய பொறுமையை நாம் சுதந்தரிக்காவிட்டால், நம்முடைய சோதனைகளில், விசுவாசத்தில் திருப்திகரமாக நிலை நிற்கவில்லை என்பது பொருளாகும். இப்படியிருந்தால், நாம் தேவனுடைய இராஜ்யத்திலும் பொருந்துவதற்கு வாய்ப்பில்லை.

**R3245 (col.1 P6) :-**

“பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது” என்றும் “விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்றும்”, நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது” என்று அப்போஸ்தலன் விவரிக்கிறார். பொறுமையினால் அநேக நல்ல குணங்கள் வளர்ச்சியடையும் என்று ஆதாரத்தோடு நீருபிக்கப்படுகிறது. தேவனுடைய ஜனங்களுக்குள் பொறுமையானது, விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். மேலும் பொறுமையின் அளவு, நமக்குள் இருக்கும் விசுவாசத்தின் அளவை எளிதில் கணித்துவிடும். எப்போதும் பதற்றமாகவும், அமைதியற்ற மனநிலையும் உடைய கிறிஸ்தவர்கள் விசுவாசம் இல்லாதவர்கள். அவர்களுக்குள் விசுவாசம் இருந்தால், தேவனுடைய வாக்குறுதிகள் மேல் நம்பிக்கை வைத்து பொறுமையாக காத்திருப்பார்கள். எல்லா சூழ்நிலையிலும், நமக்களிக்கப்பட்ட பொறுப்புகளை நாம் செய்துவிட்டு, அதற்குண்டானப் பலனையும், காலங்களையும், நேரங்களையும் தேவனிடத்தில் பொறுப்பை ஒப்படைத்து விட்டு அமைதலோடு காத்திருக்க வேண்டும்.

**R3246 (col.2P1):-**

இன்றைக்குள்ள தேவனுடைய பிள்ளைகள் தேவனுக்காகக் காத்திருக்கும் விசுவாசம், நீடிய பொறுமை, மற்றும் கீழ்ப்படிதல் என்னும் பாடத்தை தங்களுடைய இருதயத்திற்குக் கொண்டுச்செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். தேவன் வாக்களித்த பகிரங்கமான இராஜ்யத்தின் ஸ்தாபனத்திற்கும், அதனால் வரும் ஆசீர்வாதங்களுக்காவும், சமாதானத்திற்காகவும் நாம் நீண்ட காலமாகக் காத்திருக்கிறோம். மனுஷருடைய கோபம் தேவனை துதிக்கும் துதியாக மாறி, தேவனிடத்தில் அவர்கள் செல்வதற்கான வழியை வகுத்து, காலப்போக்கில், ஏற்ற சூழ்நிலை வரும்போது, அவருடைய இராஜ்யத்தில் அனைவரும் சரியான இடத்தைப் பெறும் வரைக்கும் நீடிய பொறுமையோடு நாம் காத்திருக்க வேண்டும்.

## 8. நாம் “உபத்திரவங்களில் ஏன் மேன்மை பாராட்ட” வேண்டும்?

ரோமர் 5:3 “உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து..”

**R2737 (col.1 P6,7) –**

முன்னேற்றமடைந்த ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய வாழ்க்கையில் வீசின புயல்களை, சூரிய பிரகாசத்தையும், துக்கங்களையும், மகிழ்ச்சிகளையும், கண்ணீர்களையும், சிரிப்பையும் மீண்டும் நினைவுக்குக் கொண்டுவருகிறான். ஞானமான சிந்தனையினால் அவைகளின் தாக்கம் குறைந்து, சோதனைகளையும், உபத்திரவங்களையும், வாழ்க்கையின் போராட்டங்களையும், நமக்காக ஏற்படுத்தப்பட்ட பாடங்கள் என்றும் அவைகள் மாறுவேடத்தில் வந்த ஆசீர்வாதங்கள் என்றும் உறுதியளிக்கும் தேவனுடைய வார்த்தைகளைக் கட்டளையாகப் பெற்றதினால், தன்னுடைய உபத்திரவத்தின் வீரியம் குறைந்துக் கொண்டிருப்பதைக் காண்கிறான்.

“காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான் உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.” - 2 கொரி 4:16,17

மேலும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பக்கப்படும் முன் கிடைக்காத, இப்படிப்பட்ட திடமான பரிசுத்தமுள்ள மகிழ்ச்சியை முழுமையாக உணர்ந்து கொள்வார். பகை, கோபம், பொறாமை போன்ற குணங்களின் கலப்படமில்லாத தனிமைப்படுத்தப்பட்ட சந்தோஷமாக இருக்கிறது. ஏனெனில், அவர்கள் அநியாயத்தில் பிரியப்படாமல், சத்தியத்தில் மகிழ்ந்தவர்கள். மேலும், முந்தைய காலத்தைக் காட்டிலும் தேவனுக்கான சந்தோஷமும், அவருடைய வார்த்தைகளினால் கிடைக்கும் சந்தோஷமும், பரிசுத்த ஆவியினால் கிடைக்கும் சந்தோஷமும், விலையேறப்பெற்ற விசுவாசத்தில் இருக்கும் சகோதர ஐக்கியத்தினால் வரும் சந்தோஷமும் நம்முடைய உபத்திரவத்தின் காலத்தில் தேவனுடைய கிருபையின் மூலமாக நமக்கு கூடுதலான சந்தோஷங்களைத் தருகிறது. தேவன் உபத்திரவங்களை விரும்புகிறார் என்று அர்த்தமல்ல, அவர் பொறுமையை அதிகமாக விரும்புகிறார். இந்த ஒரு நற்குணம் நமக்குள் வளர்ச்சியடைவதற்காக தேவன் நமக்கு இந்த உபத்திரவங்களை அனுமதிக்கிறார். அவருக்குள் நாம் சரியாக வழி நடத்தப்பட்டால், நிச்சயமாக நாம் தேவனுடைய விருப்பத்தின்படி நாம் அதிகமாக கனிக்கொடுப்போம்.

**R3123 (col.1 P3): -**

தேவனுடைய சந்தோஷங்களை ருசிபாராதவர்கள், உபத்திரவத்தில் சந்தோஷப்படுவதைக் குறித்து இந்த உலகத்தின் கண்ணோட்டத்தில் எவ்வாறாக இருக்கும் என்று யோசித்து பாருங்கள். “கிறிஸ்துவுக்காக அனுபவிக்கும் பாடுகளினால் வரும் மகிமையை அதற்கு ஒப்பிட முடியாது” என்பதற்காக நாம் மகிழ்ந்து களிக்கூறலாம். எல்லா புத்திக்கும் மேலான தேவனுடைய சமாதானத்தை அவருடைய ஜனங்களின் இருதயத்தையும், நிரப்பியதைப் பற்றி இந்த உலகத்திற்கு என்ன தெரியும்? என்னுடைய சமாதானத்தை உங்களுக்கு விட்டு செல்கிறேன், உலகம் தரக்கூடாத சமாதானத்தை நான் கொடுக்கிறேன். ஆகவே உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக.” என்று இயேசு சொன்ன ஆறுதலை இந்த உலகம் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பே இல்லை. மேலும், உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும், உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். மேலும், நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால் அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.” (யோவ 14:27, ரோமர் 5:3-5) இப்படியாக தேவன் அனுமதிக்கக்கூடிய

எந்த வேலைகளிலும், வரும் அனுபவங்களையும் விசுவாசமுள்ள ஊழியக்காரர்கள் மகிழ்ந்து களிகூருவார்கள். நாமும் அவர்களின் தேவனையே தேவனாகப் பெற்றிருக்கிறோம் என்பதை நினைவுகூர்ந்து அவர் வழிநடத்தும் பாதையில் சந்தோஷமாக நடப்போம். கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் இந்த ஒரு கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள மறுத்தால், நிச்சயமாக பயமும், திகிலும் அவர்களைப் பற்றிக்கொள்ளும்.

**R3281 (col.2 P1,2):-**

ஒரு வார்த்தையில் சொல்லப்போனால், நீதிமானாக்கப்பட்டு தத்தம் செய்தவர்களின் சோதனைகள், தேவனை இக்காலத்தில் சேவிக்க வாய்ப்பளிக்கிறது. பாவம் சூழ்ந்திருக்கும் இக்காலத்தில், நீதியாக வாழ்ந்து சத்தியத்தை வெளிச்சமாக ஏந்தி நிற்பவர்கள் கட்டாயமாக துன்பப்படுவார்கள். ஒருவரின் அர்ப்பணிப்பு முழுமையடைந்தப்பின் அவர்கள் தேவனை சேவிக்கும் வாய்ப்புக்காக நிச்சயம் மகிழ்வார்கள். இப்படியாக அவர்களுடைய உண்மையான அன்பும், அர்ப்பணிப்பும் தேவனுடய அங்கீகாரத்தைப் பெறும். தங்களை இவ்வண்ணமாக தத்தம் செய்து, இருதயத்தில் தூய்மையாக இருப்பவர்கள், இன்றைக்கு அனுமதிக்கப்படும் சோதனைகளின் காரணத்தை நன்கு உணர்ந்தவர்கள், தங்களுடைய உபத்திரவங்களில் மேன்மை பாராட்டுவார்கள். கிறிஸ்துவின் வார்த்தைகளினால் அவர்களை விசுவாசத்திற்கு வளர செய்து, தங்களுடைய ஆண்டவர் பட்ட அதே பாடுகளை தாங்களும் படவேண்டும் என்பதை உணர்ந்து, அவருடைய பாதையில் நடந்துக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, "உலகம் உங்களை பகைத்தால் ஆச்சரியப்படாதீர்கள், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும். நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது." "முடிவு பரியந்தம் விசுவாசத்தில் நிலைத்திருங்கள், நான் உங்களுக்கு ஜீவ கிரீடத்தை தருவேன்." என்ற வாக்குத்தத்தங்களை நினைவுக்கூறுவார்கள்.

மேலும், விசுவாசத்தில் நிலைத்திருப்பவர்கள், தாங்க முடியாத சோதனைகளைத் தேவன் அனுமதிக்க மாட்டார் என்பதையும், அதிலிருந்து தப்பிப்பதற்கு வாய்ப்புகளை அவர் ஏற்படுத்த வல்லவர் என்பதையும் அறிந்து, சோதனையின் நாட்களில் அவர் நம் அருகில் இருப்பார் என்பதை உணர்ந்து அவர்களுடைய உபத்திரவத்தில் இன்னும் அதிகமாக மேன்மை பாராட்டுவார்கள். அவர்கள் வளரவேண்டிய குணங்களைப் பற்றியும், உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையியும், உண்டாக்குகிறதென்பதையும் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறார்கள். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடையை இருதயங்களில் ஊற்றபட்டிருக்கிறபடியால், அந்த அன்பு நம்மை வெட்கப்படுத்தாது. இவையனைத்துமே உபத்திரவங்களின் வழியாக மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். உத்தமமாக நாம் நம்மை அர்ப்பணித்ததினால், இந்த உலகத்தின் ஆவிக்கும் சுய நலத்திற்கும் பதிலாக, தேவனுடைய முழு அன்பும் நம்முடைய இருதயத்தில் பொழியப்படுகிறது - 1 கொரி 10:13, ரோமர் 5:3,5

### 9. நாம் ஓயாமல் எந்த விதமான சிந்தனைகளை மனதில் சிந்தித்துக் கொண்டிருந்தால், நம்முடைய "உபத்திரவங்களில் பொறுமையாக" இருக்க முடியும்?

ரோமர் 12:12 "நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள். உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள்."

**R2213 (col.2 P3): -**

“உபத்திரவத்தில் பொறுமையாயிருப்பது”

உபத்திரவம் என்ற வார்த்தை ‘ட்டிரிபுலம்” (**tribulam**) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. கோதுமையைச் சுத்தப்படுத்தவும், அதில் உள்ள உமி போன்ற தேவையில்லாத காரியங்களையும் பிரிக்கும் போரடிக்கு இயந்திரத்தை லத்தினில் “ட்டிரிபுலம்” என்று அழைத்தார்கள். இப்படிப்பட்ட ஒரு சொல்லே கோதுமை என்று அழைக்கப்படும் தேவனுடைய ஜனங்களுக்கு (தத்தம் செய்தவர்கள்) எவ்வளவு நேர்த்தியாகப் பொருந்துகிறது. அந்த கோதுமை மணிகளே நமக்குள் வளரும் புது சிருஷ்டி, ஆனால் தேவையற்ற உலகக் காரியங்களை உமி நம்மை மூடிக் கொண்டிருக்கிறது. ஆம், மிக விலையுயர்ந்த பொக்கிஷம் பூமியில் அழியக்கூடிய காரியங்களால் மூடப்பட்டிருக்கிறது. சிறந்த முறையில் கோதுமை மணி பயன்படுத்துவதற்காகக் களஞ்சியத்தில் சேர்க்கப்பட வேண்டும், ஆகவே ஒவ்வொரு மணிகளும் இந்த உமியை விட்டு வெளியே வருவதற்கு உபத்திரவப்படுவது மிக அவசியமாக இருக்கிறது. இந்தக் கோதுமை உமியை விட்டு பிரியும் வரைக்கும் இனி வரக்கூடிய தேவ ஊழியங்களுக்கும் தேவனால் அழைக்கப்பட்ட அழைப்பிற்கும் தகுதிப்பெற முடியாது. தேவனுடைய பரிபூரண சித்தத்தைப் பொருத்தவரையில், நம்முடைய அபூரணமான நிலை, என்னவென்பதை நன்கு அறிந்திருக்கிறோம். ஆகவே தேவன் எவ்வளவு உபத்திரவங்களை அனுமதித்தாலும், அனைத்தையும் நீடிய பொறுமையோடு சகித்து, அதில் மகிழ்வதற்கு ஆயத்தமாக இருக்கக்கடவோம். “நம்முடைய உபத்திரவத்திலும் மேன்மை பாராட்டுவோம்”. - ரோமர் 5:3

**R2258 (col.1 P4 -col.2 P1): -**

உண்மையில் தேவனோடு உடன்படிக்கை செய்தவர்களுக்கு வரும் ஒவ்வொரு சோதனைகளும், எல்லா உபத்திரவங்களும், வாழ்க்கையின் பிரச்சனைகளும் அவர்களின் குணங்கள் நீதியின் அடிப்படையில் அன்பினால் கட்டப்பட்டிருக்கிறதா என்று சோதித்து, நிரூபிப்பதற்காகவே தேவனால் அனுமதிக்கப்படுகிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் எதிர் நோக்கும் சோதனைகள், பிரச்சனைகள் மற்றும் உபத்திரவங்கள் நமக்கு முன் ஒரு புதிய வெளிச்சத்தையே கொண்டு வந்து, நாம் மேற்கொள்ள வேண்டிய நல்ல போராட்டத்திற்குத் துணை புரியும். இப்படிப்பட்ட சின்ன சின்ன சோதனைகள் மூலமாக நாம் தேவன் மேல் வைத்திருக்கும் அன்பையும், பக்தியையும் அவர் நிரூபித்துக் கொண்டிருக்கிறார் என்று நாம் உணரும்போது, நமக்கு வரும் அனைத்தும் எவ்வளவு முக்கியமான வாய்ப்புகள் கிடைக்கும்போது, நாம் தேவனிடத்தில் வைத்திருக்கும் அன்பையும், பக்தியையும் செயல்முறைப்படுத்தி நிரூபிக்கவேண்டும். இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது ஒவ்வொரு சோதனையும் நாம் பெறும் ஒவ்வொரு ஆசீர்வாதமாகும். “என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்”. “அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமை உண்டாகக் காணப்படும்.” “சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்”. இக்காலத்தில் நாம் அனுபவிக்கும் இலேசான உபத்திரவம், வரக்கூடிய கனம் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல”.

இப்படியாக, தேவனிடத்தில் அன்புக்கூறுகிறவர்கள், அநேக உபத்திரவங்களின் வழியாக அவர்கள் தேவன் மேல் வைத்த அன்பு சோதிக்கப்பட்டு, அவருடைய இராஜ்யத்தில் இடம் பெறுவார்கள் என்பதை மறுபடியும் வலியுறுத்துகிறோம். தங்களுடைய முழு இருதயத்தோடு தேவனிடத்தில் அன்புக்கூறுகிறவர்களை, இந்த உலகம், மாம்சம் அல்லது பிசாசால் ஏதோ ஒரு வழியில் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாகத் தூண்டப்படுவார்கள். இவர்கள் தேவனுடைய திட்டத்தைக் காட்டிலும், தங்களுடைய சொந்த கருத்துக்களையும், கூற்றுக்களையும், விரும்புவார்கள். இப்படிப்பட்டக் காரியங்கள் சுயநலம் அல்லது குறிக்கோள் அல்லது பகை, பொறாமை, கோபத்தின் அடிப்படையைக் கொண்டதாக இருக்கிறது என்று நாம் ஆராய்ச்சியின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**F 632(P2) – F634 (P2) : -**

வெகு சீக்கிரத்தில் இந்த உலகத்தின் இராஜாக்களும், ஆசாரியர்களும், நியாயதிபதிகளுமாக இருக்கக்கூடிய ஆசாரியகளாகிய நாம் இந்த உலகத்தைக் கண்டு மனதுருக வேண்டும். ஆனால் இக்காலத்தில் நம்முடைய உடல் பலத்தை அதிகமாக செலவழிக்கவோ, பலவீனமானவர்களை சுகப்படுத்தவோ அவசியம் இல்லை. நாம் ஒவ்வொரு விழுந்துபோன மனுக்குலத்தின் பங்காளிகளாக இருப்பதினால், இப்படிப்பட்ட அனுபவங்களை பெற்றுக்கொண்டிருக்கிறோம். ஏனெனில், முற்காலத்தில், “நாமும் கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்தோம்”. இயேசு தன்னுடைய ஜீவனை பலியாகக் கொடுக்கும்வரையில் சபையும் அவருடைய காரியங்களைப் புரிந்துக் கொள்ளமுடியவில்லை. பெந்தெகோஸ்தே நாளின் போது, பரிசுத்த ஆவி கொடுக்கப்படும் வரைக்கும் சீஷர்களுக்கு பரலோகக் காரியங்களைப் பற்றி சொல்வது வீணாக இருந்தது. (யோவா 3:12,16-13, கொரி 2:10-12) ஆகவே நம்முடைய ஆண்டவர் தம்முடைய முழு ஆற்றலையும் உவமைகள் மற்றும் புரியாத புதிர்களைச் சொல்லவும் செலவழித்தார். பரிசுத்த ஆவியைப் பெற்றபின் சீஷர்களுக்கு அனைத்தும் புரிந்தது. ஆனால் தேவனுடைய இராஜ்யத்தில் இன்னும் மேன்மையானக் காரியங்கள் நடக்கும் என்பதை அவர் காட்டுவதற்காக அநேக உடல் ஊனமுற்றோர்களையும், பலவீனப்பட்டிருந்த மனிதர்களையும் சொஸ்தமாக்கினார். இந்த வேலைகளை இயேசுவோடு செய்வதற்கு சபையாரருடைய புரிந்து கொள்ளுதலின் கண்களைத் திறந்து, மரித்த நிலையில் இருப்போரை அவருடைய சத்தத்தைக் கேட்கச்செய்து, ஒரு புதிய வாழ்க்கையைத் துவங்க அழைப்பைக் கொடுத்திருக்கிறார். ஆகவே “நாமும் சகோதருக்காக ஜீவனைக் கொடுப்பதற்கு” மிகப்பெரிதான சிறப்புரிமையைப் பெற்றிருக்கிறோம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். “இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அனுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்.” - 1 யோவான் 3:16, கொலோ 1:24

இந்த வார்த்தைகளின்படி சொல்லர்த்தமாக நம்முடைய ஜீவனை இழக்கவேண்டிய அவசியமில்லை. நம்முடைய சரீரத்தில் உள்ள ஜீவனை இழப்பதினால் நமக்கு எந்த விதமான பலியின் பலனும் கிடைக்காது. மேலும் “கிறிஸ்துவின் பாடுகள்” எந்த விதத்திலும் நம்முடைய சரீரத்திற்கு வேதனைத் தருவதில்லை. நம்முடைய ஆண்டவர் நமக்காக இழந்த அவருடைய ஆற்றலையும், ஜீவனையும், அவர் நம்முடைய பலவீனங்களுக்காக உணர்ச்சிவசமாக மனதுருகின காரியங்களையும் நம்முடைய பலிகளுக்கு என்றுமே ஒப்பிட முடியாது. ஆகவே நம்முடைய எதிர்ப்பார்ப்புகள் இந்த உலகத்தைக் காட்டிலும்

மேலானதாகவும், கிறிஸ்து அநேகக் காரியங்களை இழந்தது போல, நாமும் நம்முடைய சகலவிதமான பூமிக்குரியவைகளை இழந்து, “அவரோடுகூட பாடுபட வேண்டியவர்களாக” இருக்கிறோம். கனம் பொருந்திய மனிதர்கள் மத்தியிலும், செல்வாக்கு நிறைந்தவர்கள் மத்தியிலும், இழப்புகள் இலகுவாக அனுமதிக்கப்படுகிறது. ஆனால், நம்முடைய ஆண்டவர் முழு விருப்பத்தோடு மற்றவர்களை ஐசுவர்யவான்களாக்கும்படி தன்னை தரித்திரராக்கினார். நமக்கு மாதிரியை விட்டுச் செல்லும்படி, இதே அனுபவத்தை அப்போஸ்தலர்களும் பெற்றிருந்தார்கள். இப்படியிருக்க, தேவனால் அனுமதிக்கப்பட்ட “தீமோத்தேயு பட்ட பாடுகளையும்”, “அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய சரீரத்தில் பெற்றிருந்த முள்ளையும்” ஏன் அனைவராலும் காணமுடியவில்லை? உண்மையில் இவையனைத்தும் சாத்தானால் வந்தது. ஏனெனில், பாவம் சாத்தானால் நுழைந்தது. அனைத்து பலவீனங்களும் பாவத்தின் பின்விளைவாக இருக்கிறது. ஆனால் சிறையிருப்பு, அடிகள், கப்பல் சேதம் மற்றும் மரணம் இதை தவிர அவனால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

இந்த இயற்கை சீற்றத்திற்கு, நேரடியாக இல்லாவிட்டாலும், மறைமுகமாக தூண்டிவிடக்காரணமானான். ஆனாலும் அப்போஸ்தலன் தன்னை உயர்த்தாமல், தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து, இப்படிப்பட்ட அனுபவங்களை, தான் தேவனுக்காக செலுத்த வேண்டிய பலியின் ஒரு பகுதியாக எண்ணி, சத்தியத்தின் நிமித்தம் மகிழ்ச்சியடைந்து உபத்திரவத்தில் தேவனை மகிமைப்படுத்தினார்கள். மற்றவர்களைக் காட்டிலும் இவருக்கு அதிகமாக துன்பங்கள் வந்தபோதும் வரக்கூடிய மகிமை அதிகரிக்கும் என்பதை அறிந்து இவர் மகிழ்ந்தார்.

இருப்பினும், நீதியின் நிமித்தம் வரக்கூடிய துன்பங்களிலும், தவறான செயலின் நிமித்தம் வரும் துன்பங்களிலும் இருக்கும் வித்தியாசத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும். சுயக்கட்டுபாடில்லாதவர்கள் மற்றவர்களுடைய காரியங்களில் தலையிடுகிறதினாலும், மற்ற தீய செயலினாலும், பெருந்தீனியராக இருப்பதினால் (பிலி 3:19) அநேக உபத்திரவங்களுக்குள் அகப்படுகிறார்கள். இப்படிப்பட்ட உபத்திரவங்களில் நாம் என்றுமே சந்தோஷப்படுபவர்களாக இராமல் ஜெபத்தில் தரித்திருந்து - பொறுமையோடும், சுயக்கட்டுப்பாடோடும் இருக்கவேண்டும். புது சிருஷ்டிகளின் நியாயத்தீர்ப்பின் போது, முன்னதாகவே அறிவிக்கப்பட்டபடி சகல வாய்ப்புகளும் அவர்களுக்கு திறக்கப்படும். அதில் அவர்கள் பக்திவைராக்கியத்தோடும், சுயபலி செலுத்தும்போது, மாம்சீக ரீதியாக அநேக துன்பங்களை அடைவார்கள். இந்தக் காரியம் உலகத்தாரின் பார்வைக்கு விவேகமற்ற செயலாகத் தோன்றும். அப்பொழுது நாம் வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை. இப்படிப்பட்டப் பாடுகள் மத்தியில் அவர்கள் தேவனை மகிமைபடுத்த வேண்டும் - கிறிஸ்துவின் நிமித்தம் பாடுகளை அனுபவிப்பதற்காக நாம் சந்தோஷப்பட்டு களிக்கூற வேண்டும்.

ஒருவேளை நம்முடைய பாவத்தினால் அல்லது சுய நலத்தினால் வராத எந்த உபத்திரவத்தையும் நாம் பொறுமையோடு சகித்து, தேவனுக்கு நன்றிசெலுத்த வேண்டும். ஆயிர வருட ஆட்சியில் வேதனையால் புலம்பிக்கொண்டிருக்கும் முழு மனுக்குலத்தை இரக்கத்தோடும், பரிவோடும் தேவனிடத்தில் சேர்க்க வேண்டிய பொறுப்பில் இருப்பவர்களுக்கு தேவன் இக்காலத்தில் அனுமதிக்கும் அனுபவங்களின் மூலமாகப் பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். இப்படியாக இருதயத்தில் வரும் கிருபையும், இரக்கமும் வாழ்க்கையில் எல்லா கட்டங்களிலும் சாதகமானக் காரியங்களைக் கொண்டு

வராது. மேலும், நம்முடைய அழியக்கூடிய இந்தச் சரீரங்களைப் புதிதாகவும் மாற்றாது. ஏனெனில், "காணாமல் விசுவாசிக்ககூடிய நம்மை" கண்டு விசுவாசிப்பதற்குரிய நிலைக்குத் தள்ளக்கூடிய அபாயநிலை நேர்ந்திடுமே. ஆகவே சபைக்கு இப்படிப்பட்ட காரியங்களைத் தேவன் அனுமதிப்பதில்லை. ஏனெனில், நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். இருதயத்தில் உள்ள கிருபையானது, உஷ்ணம், குளிர், தாகம், பசி போன்ற காரியங்களுக்கு நம்மை உணர்வற்றவர்களாக மாற்றுவதில்லை. இவைகளில் நமக்கு தேவைப்பட்டவைகள் கிடைக்க தாமதிப்பதன் மூலம் நாம் பொறுமையைக் கற்றுக்கொண்டாலும், நம்முடைய பரலோகப் பிதாவின் பராமரிப்பும், அவருடைய வாக்குத்தத்தங்களும் நம்பி, சகலமும் காலப்போக்கில் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று பொறுமையோடும் விசுவாசத்தோடும் காத்திருக்கிறோம்.

இந்த உலகம் தங்களுடைய வியாதிகளுக்காக வேர்களையும், மூலிகைச் செடிகளையும் தேடுகிறபோது, புது சிருஷ்டிகள் எதையும் பயன்படுத்தாமல் இருப்பார்கள் என்று பொருள்படுமா? கண்டுபிடிக்கப்பட்ட எதையும் பயன்படுத்தாமல் அந்த வேதனைகளிலும், வலியிலும், துன்பப்பட்டு, அவர்களின் பொறுமையை நிரூபிக்க வேண்டுமா? நிச்சயமாக இல்லை. சுவிசேஷ யுகத்தில் தேவன் விழுந்துபோன மாம்சத்தோடு அல்ல, ஆனால் அவர்களுக்குள் இருக்கும் புது சிருஷ்டியோடு மட்டுமே தொடர்பு கொள்கிறார் என்பதை நம்முடைய சிந்தையில் பதித்துக் கொள்ளவேண்டும். "மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது" - நாம் அதை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்திருக்கிறோம். எப்படியாகிலும் அது அழியக்கூடியது. நமக்குள் இருக்கும் புது சிருஷ்டியே முக்கியமானது. நம்முடைய உடன்படிக்கையை நிறைவேற்ற தடையில்லாதபடிக்கு, வியாதிகளிலிருந்தும் நம்முடைய சரீரத்தைப் பாதுகாத்துக்கொள்ள நாம் நியாயமானக் காரியங்களைச் செய்யவேண்டும். உங்கள் சரீரம் பசியோடும் தாகத்தோடும் இருக்கும்போது, தேவனுடைய வேலைகளை முழு பலத்தோடு செய்ய, தேவையான ஆகாரத்தை அளவோடு கொடுக்க வேண்டும். நம்முடைய சரீரம் குளிரில் நடுங்கும்போது அதற்குத் தேவையான வஸ்திரத்தைக் கொடுக்க வேண்டும். இவையனைத்தும் தேவன் நமக்கு அனுமதிக்கிறார். நாம் ஜுரத்தில் இருக்கும்போதும், அதை குறைப்பதற்குத் தேவையான முயற்சிகள் எடுக்கவேண்டும். அதற்காக நாம் ஞானதிருஷ்டிக்காரர்களுக்கும், அறிந்த நிலையை உண்டாக்குபவர்களிடமும், சாத்தானின் உதவியோடு வேதனைகளைப் போக்க குறி சொல்பவர்களுக்கும் நாம் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அழிந்துபோகும் சரீரத்தைக் காத்துக் கொள்ள ஒரு சராசரி மனுஷன் எவ்வாறு செயல்படுகிறானோ, அவையனைத்தையும் செய்ய புது சிருஷ்டியும் உரிமைப் பெற்றிருக்கிறது. தங்களுடைய சரீரத்தை நியாயமாகப் பராமரித்துக் கொள்வது அவரவரின் கடமையாக இருக்கிறது. நம்முடைய ஆண்டவருக்காக இந்தச் சரீரங்களை மரணபரியந்தம், ஒப்புகொடுத்து, தேவனுக்கேற்ற பணிகளை தன்னால் முடிந்த வரையிலும் செய்யவேண்டும் என்ற காரணத்தினால், புது சிருஷ்டிகளின் இந்தக் கடமையைப் பற்றி புது சிருஷ்டி தொகுப்பில் மிகத் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

## 10. ஜீவ பலியாக நம்மை ஒப்புக்கொடுப்பதற்கு நாம் விசுவாசத்தோடு செய்த உடன்படிக்கைக்குப் பொறுமை தேவைப்படுகிறதா?

**R3266 (col.2 P5): -**

தேவன் நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராக இருந்து, நம்முடைய பலியின் வேலைகளைச் செய்து முடிப்பதற்கு தொடர்ந்து வாய்ப்புகளைக் கொடுத்துகொண்டே

இருக்கிறார். ஆனால் தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்ற நம்முடைய சித்தங்களை வெட்டி எறியப்பட வேண்டும். இல்லாவிட்டால் நாம் என்றுமே அவருடைய ராஜ்யத்தில் பங்கு பெறமுடியாது. இராஜரீக ஆசாரியர்களாக இருக்கமுடியாது. ஆகவே தேவன் மிக கிருபையாக பாடத்திற்கு மேல் பாடங்களையும், கொடுத்து நம்மை இவைகளின் முக்கியத்துவங்களை உணரச்செய்கிறார். அவருடைய வார்த்தைகள் அனைத்துமே இந்தக் கண்ணோட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. நாம் நம்முடைய சரீரங்களுக்கு மரித்து, தேவனுக்கும், ஆண்டவராம் இயேசுவுக்கும் நம்மை ஜீவனுள்ளவர்களாக இருப்பதின் முக்கியத்துவங்களை அவர் நமக்கு வெளிப்படுத்துகிறார். அவருடைய கிரியைகளைச் செய்யும்போது, நமக்குள் ஆவியின் கனிகள் அதிகதிகமாக வளர்ச்சியடைகிறது. பலி செலுத்தக்கூடிய ஒவ்வொருவரும், சாந்தமாகவும், மனத் தாழ்மையுள்ளவராகவும், போதிப்பவர்களாகவும் இருக்கவேண்டும். இல்லையென்றால் வெகு சீக்கிரத்தில் இந்த வழியை விட்டு விலகிவிடுவோம். நமக்குள் பொறுமையை வளர்த்துக் கொள்ளவேண்டியது அவசியமாக இருக்கிறது. ஏனெனில், நம்மை வெறுப்பதற்கும், அநீதியான காரியங்களுக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்போது அதை சகித்துக் கொள்வதற்கும் அதிகமான பொறுமைத் தேவைப்படுகிறது. இவைகள் நமக்கு சகோதர சிநேகத்தைப் பெருகச் செய்கிறது. மேலும், ஒரே வார்த்தையில் சொல்லப்போனால் - நம்முடைய இருதயங்களிலும், வாழ்க்கையிலும், தேவனுடைய முழு சித்தம் வளர்ச்சியடைய, முதலாவது நீண்டகாலமாக அன்பு, ததும்பி வழிய வேண்டும். அப்போது நாம் இந்தப் பூமியில், பலியின் வேலைகளை முடிக்கமுடியும்.

## 11. நாம் எதிர்ப்புகளையும், உபத்திரவங்களையும் எதிர் நோக்குவது எப்படி?

1 பேது 2:20-23 - நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார். அவர் பாவம் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனைக் காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புசெய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.”

**R3199 (col.1P3): -**

இப்படிப்பட்ட எதிர்ப்புகளை, நாம் எதிர்ப்பார்க்க வேண்டியதே, சந்தேகத்திற்கு இடமின்றி நம்முடைய மரணம் வரைக்கும் இவைகள் தொடர்ந்து வரும். இந்த எதிர்ப்புகளுக்கு நாம் பொறுமையோடு ஒப்புக்கொடுத்தால், நம்முடைய இயல்பான உலகப்பிரகாரமான சந்தோஷங்களைப் பலிசெலுத்தி, எந்தப் பிரச்சனைகளின் மத்தியிலும், சத்தியத்தின் நிமித்தம் நல்ல போர்ச் சேவர்களாக உறுதியோடு தேவனுடைய சித்தத்தைச் செய்யவும், வருங்காலத்தில் அவருடைய ராஜ்யத்தில் செய்யவும் நமக்கு வாய்ப்பளிக்கும். நம்முடைய சரீரங்களைத் தெய்வீகப் பணிக்காக ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பதன் பொருள் இதுவே. இந்த ஊழியத்தில் உண்மையாக இருப்பதற்கு ஶி முதலில் தேவனுடையத் திட்டத்தைக் கவனமாகப் படித்து புரிந்துகொள்ள வேண்டும். இரண்டாவதாக பரிசுத்த ஆவியைப் பெறவேண்டும். அதன் வழியாக தேவனுடையத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நாம் வைராக்கியம் கொண்டு, எப்படிப்பட்ட உலகப்பிரகாரமானக்காரியங்களைப் பலி செலுத்த வேண்டுமானாலும் அதை செலுத்தி,

தேவனுடைய திட்டத்தை நிறைவு செய்ய வேண்டும். இதுவே மூன்றாவது நிலையாகும்.

**R1964(col.2 P2): -**

கிறிஸ்துவோடு துன்பப்படும் யாவரும், எந்த அளவு துன்பங்கள் வந்தாலும், இயேசுவைப்போல அதே பணிவுடனும், மனத்தாழ்மையுணர்வுடனும், இரக்கத்துடனும், பொறுமையுடன் சகித்தால் வரக்கூடிய கடுஞ்சோதனையானக் காலத்திலும் நீடிய பொறுமையோடிருக்க நம்மை பழக்குவிக்கும். இந்த ஒழுக்கக் கேடான இந்த மனுக்குலத்தைப் பொறுத்தவரையில் இயேசு ஆச்சரியப்படவில்லை. ஏனெனில், பாவம் நிறைந்ததும், இருளின் அந்தகார லோகாதிபதியின் உலகத்தில் இருப்பதை அவர் அறிந்திருந்தார். ஆகவே அனைத்து விதமான துன்பங்களையும், உபத்திரவங்களையும் அவர் எதிர் நோக்கியிருந்தார். இவையனைத்தையும் மிகுந்த அன்பான இருதயத்தோடும் எதிர் நோக்கினதால், மற்றவர்களுக்காக வைத்திருக்கும் இரக்கமும் மற்றும் பரிவினாலும், அவருடைய துன்பங்களை அவர் பொருள்படுத்தவில்லை. உண்மையில், கிறிஸ்துவைப் போல, நாமும் இப்படியாக நீடிய பொறுமையுடன் பாடுகளை அனுபவிக்கும் ஆவி நமக்குள் இருந்து, குறித்தக் காலத்தில் பரலோகம் செல்வதற்கு மெய்ப் பிக்கப்பட்டிருக்கிறோமா? “நீங்கள் நன்மை செய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள். ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.” ஆகவே நாம் “இளைப்புள்ளவர்களாய் நம்முடைய ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ள வேண்டும்” (1 பேதுரு 2:20-23, எபிரேயர் 12:3) கிறிஸ்து பாடுகளைச் சகித்ததுப் போல நாமும் இரக்கத்தோடும், நம்மை துன்பப்படுத்துபவர்கள் செய்யும் மோசமானத் தவறுகளுக்காக ஜெபித்து, கூடுமானால் அவர்கள் மனம் திரும்ப அவரிடம் விண்ணப்பித்து, அவருடைய ஊழியத்தைச் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும், சகலத்தையும் சகித்து, நல்ல போர்ச் சேவகனாக நாம் தேவன் மேல் வைத்திருக்கும் பக்தியை நிரூபிக்க தேவன் கொடுத்த இப்படிப்பட்ட வாய்ப்புகளுக்கு நன்றி செலுத்தக்கடவோம்.

## 12. நாம் “அனைவரிடமும் பொறுமையாக” எப்படி இருப்பது?

1 தெச 5:14 - மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிற தென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள். திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்”.

**R3136 (col.1P5): -**

“அனைவரிடமும் பொறுமையாயிருங்கள்” - தேவனுடைய ஜனங்களுக்கு மத்தியில் இருக்கும் சரிசம நிலையுள்ளவர்கள் மற்றவர்களிடம் இரக்கத்தையும், பொறுமையும் நடைமுறைப்படுத்த வேண்டும், அதாவது பெலவீனர்களிடமட்டும் அல்ல, அனைவரிடமும் இப்படி நடக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுவதாக தோன்றுகிறது. “பொறுமை உங்களுக்கு மிக அவசியம்” என்று அடிக்கடி வசனங்கள் குறிப்பிடுகிறது. உண்மையான தேவ பிள்ளைகள் இதற்குள் இருக்கும் சத்தியத்தை உணர்ந்துகொண்டு, கிறிஸ்துவ வாழ்க்கையில் பிரதானக் குணங்களில் பொறுமையும் ஒன்று என்பதை

ஆழமாகப் புரிந்துகொள்வார்கள்.

(1) அறிவின் வளர்ச்சி, நம்மை பொறுமையில் வளரச்செய்யும். பிதாவாகிய தேவன் நம்மிடத்தில் காட்டின பொறுமையை நாம் உணர்ந்தால், அதே பொறுமையை நிச்சயமாக நாம் மற்றவர்களிடத்திலும் காட்டலாம்.

(2) முழு மனுக்குலத்தின் மேலும் மிகப்பெரிய அழிவு காத்திருப்பதை அறிந்த நாம் நம்முடைய விழுந்துபோன நிலை மற்றும் அந்த வீழ்ச்சி ஏதோ ஒரு வகையில் எவ்வாறு பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது என்றும் - பெரும்பாலும் மனதாலும், உடலாலும் அநேகர் பாதிக்கப்பட்டதைக் காணும்போது, நிச்சயமாக நம்முடைய மனது இரங்கும். நமக்குள் இருக்கும் தயாள குணமும், பரிவும் அதிகரித்து, இவைகளோடு நாம் தொடர்பு கொள்ளும்போது, நமக்குள் நீடிய பொறுமை பெருகும். விசேஷமாக விசுவாச வீட்டார் - தேவனுடைய கிருபையான அழைப்பில், இன்னும் பூரணப்படாதவர்களை உண்மையில் இந்த அனுபவம் பொருந்தும். தேவனுடைய கிருபையான அழைப்பை உணர்ந்தவர்கள், அவர் அழைத்தவர்களிடம் நாம் மிக ஜாக்கிரதையாக அணுகி, அவர் அழைத்த அழைப்பிற்கு இசைந்து கிரியை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்க விருப்பப்படும் யாவரையும் இடுக்கமானப் பாதையில் நம்மோடு நடக்க முழுமையாக முயற்சிக்க வேண்டும். இந்த ஒரு வேலைக்கு நமக்கு விசேஷித்தப் பொறுமை தேவைப்படுகிறது. - ரோமர் 14:15, 1 கொரி 8:11

**F306 – F307 –**

“அனைவரிடமும் சமாதானமாக இருங்கள்”

இந்த அறிவுரைக்குக் கீழ்ப்படிந்து, எல்லா சூழ் நிலைகளிலும், அனைவரின் இந்தப் பொறுமையை நடைமுறைப்படுத்தினால், மற்றவர்களோடு நாம் மிகச்சரியாக நடந்துகொள்வது மட்டும் அல்லாமல், நமக்குள் விசேஷித்த ஆவியின் கனியாகிய பொறுமையை முழு உற்சாகத்தோடு வளர்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை ஒவ்வொரு புது சிருஷ்டியும் உணர்ந்து கொள்ளமுடியும். பொறுமை என்னும் ஆவியின் கனியை நம்முடைய வாழ்க்கையில் செயல்படுத்த சபையிலும், வெளியிலும் அநேக வாய்ப்புகள் கிடைக்கும். இந்த முழு உலகமும் நம்முடைய பொறுமையை உரிமை கோருகிறார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். வசனங்களின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் அநேக உபத்திரவங்களினால் தவித்துக் கொண்டிருக்கும் இந்த உலகத்தின் நிலைமையை சரியாகப் புரிந்துகொண்டால் மட்டுமே நாம் இவர்களின் காரியங்களை உணரமுடியும். அப்போது மனிதனின் வீழ்ச்சியும் அதனால் வந்த விளைவுகள் தெளிவாகக் காணப்படுகிறது. இந்த பாவிகள் மேல் தேவன் வைத்திருக்கும் நீடிய பொறுமையையும், அவர்களை மீட்கும் விஷயத்தில் அற்புதமான அன்பையும், உளையான சேற்றிலிருந்து (பாவம் மரணம்) சபையை தூக்கி எடுத்து மிகுதியான ஆசீர்வாதங்களைக் கொடுப்பதோடு மட்டுமல்ல, இந்த முழு உலகத்தின் மனுக் குலத்திற்கும் அவர் கொடுக்கப்போகும் ஆசீர்வாதங்களைக் காணலாம். இந்த உலகத்தைப் பொருத்தவரையில் அவர்களின் பிரச்சனை என்னவெனில் - “இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களின் கண்களை குருடாக்கிவிட்டான்” தவறாக வழி நடத்திக்கொண்டிருக்கிறான். 2 கொரி 4:4

நிச்சயமாக இந்த அறிவு நமக்கு அதிகமான பொறுமையை உண்டுபண்ணும். மேலும் இந்த உலகத்தோடும் நாம் பொறுமையாக இருந்தால், தேவனுடைய

கிருபையினால் இயேசுகிறிஸ்துவுக்குள் மன்னிப்பைப்பெற்று தேவனுடைய குடும்பத்தில் ஒரு நபராக அங்கீகாரம் பெற்று, அவருடைய பாதையில் நடக்க விரும்பும் நம்முடைய கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக அழைக்கப்பட்டிருக்கும் உடன் சகோதரர்களிடம் எப்படிப்பட்ட அன்பையும், நீடிய பொறுமையையும் நாம் காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று சற்று யோசித்து பாருங்கள். இவர்களிடம் பொறுமையாக நடந்து கொள்வதைத் தவிர வேறு எதையும் நாம் செய்ய வேண்டிய அவசியமில்லை. இந்த பொறுமை நம்மிடம் குறைவாகக் காணப்பட்டால் நிச்சயமாக நம்முடைய கர்த்தராகிய இயேசு அதை கடுமையாகக் கண்டித்து உணர்த்தக்கூடியவராக இருக்கிறார். விசேஷமாக மாம்சம், உலகம், சாத்தானோடு நாம் எதிர்த்து நிற்கையில் நம்முடைய பலவீனங்களையும், மன அழுத்தங்களையும் தாங்கிக்கொள்ள அதிகமான பொறுமை தேவைப்படுகிறது. அனைவரிடமும் பொறுமையாக நடந்துக் கொள்வதற்கு, இந்த உண்மைகள் நமக்கு உதவியாக இருக்கும்.

## 13. சுவிசேஷ யுகத்தின் அறுவடையில் விசேஷித்த பொறுமை தேவைப்படும், காரணம் என்ன?

**R2155 (col. 2P1): -**

இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் நம்முடைய ஆண்டவர் மிகுந்த பொறுமையோடு இருக்க வேண்டும் என்பதை முன்னதாகவே எச்சரிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. உங்கள் சகோதரர்களிடமும், தீமையோடு போராடும்போது ஆண்டவருடைய காலத்திற்காக காத்திருக்கும் போதும், “இந்தத் தீமையான உலகத்தை சீர் பொருத்துவதற்காகவும் நாம் நீடிய பொறுமையோடு காத்திருக்கவேண்டும். விசுவாசத்திலும், தேவனுடைய திட்டத்தின் அறிவிலும், தைரியமாகத் தேவனுக்கென்று செயல்படுவதிலும் குறைவுள்ள இந்த எளிய உலகம் வருங்காலத்தில் நடப்பவைகளை அறியாமல், பொறுமையை முற்றிலுமாக இழந்துவிடுகிறார்கள். ஆனால் “உங்களுக்கு பொறுமை மிக அவசியம்” என்று தேவனுடைய ஜனங்களுக்குச் சொல்லப்படுகிறது.

**R2792 (col.2P5) - R2793 (col.1P4): -**

நாம் இப்பொழுது நுழைந்திருக்கும் சோதனைக் காலத்திற்கேற்ற ஆலோசனையை நம்முடைய அப்போஸ்தலர்கள் கொடுக்கிறார்கள். சோதனைகளும், உபத்திரவங்களும் அநேக விதமாக இருக்கும். சில மிகத் தந்திரமாக இருக்கும். கிறிஸ்துவுக்குள் வேரூன்றாதவர்களும், சத்தியத்தில் நிலையில்லாதவர்களும் நிச்சயிக்கப்பட்ட அடிப்படை சத்தியத்திலிருந்து (ஈடுபலி) விலகிப்போவார்கள். தவறான வாக்குவாதங்கள் செய்வோர்களை சாத்தான் தன்னுடைய கருவியாகப் பயன்படுத்தி இந்த முழு உலகத்திலுள்ள அனைவரையும் வஞ்சித்துக் கொண்டிருக்கிறான். இக்காலத்தில் சாத்தானின் வல்லமையால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கிறிஸ்தவர்களின் விஞ்ஞானத்தைத் தவிர வேறு எதுவும் சோதனையாக வைக்கப்படுவதில்லை. அவனுடைய தவறானக் காரியங்களுக்கும் அசத்தியங்களுக்கும் அநேக நம்ப தகுந்த ஆதாரங்களை முன்வைக்கிறான். அதை நம்பினவர்கள், சத்தியத்தினிமித்தம் வரும் துன்பங்களிலிருந்து நிச்சயமாக ஒரு விடுதலையைப் பெறுவார்கள். ஏதோ ஒரு வழியில் விடுதலை வந்தால் சரி என்றிருப்போருக்கு இந்தக் காரியங்கள் மிகவும் சாதகமாக இருக்கும். சத்தியத்தினிமித்தம் வரும் வேதனைகளிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் தப்பித்துக் கொள்வதற்காக தங்களைத் தாங்களே வஞ்சிக்கக் கற்றுக் கொண்டபின் சத்தியத்தின் உண்மையாக

அர்த்தங்கள் அவர்களுக்குத் தவறாகத் தோன்றும். அதற்கு பின் சில குழப்பங்கள் உண்டாகி, இறுதியில் அனைத்து சத்தியங்களும் தவறாகத் தோன்றும். தவறாகத் தோன்றும் சத்தியத்தின் வெளிச்சம் நாளுக்கு நாள் அவர்களுக்கு அதிகரித்து, முற்றிலுமாக இருளில் தள்ளப்படுவார்கள்.

மிகுதியான ஆர்வ கோளாறு இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்குக் கொண்டுசெல்லும். "மரணம் இல்லை, ஜீவன் உண்டு, வேதனை இல்லை, சுகமுண்டு, தீமையில்லை நன்மையுண்டு" என்று தங்களுக்குத் தாங்களே சொல்லிக்கொள்கிறார்கள். இவை அனைத்தும் முரண்பாடான வாக்கியங்களாக இருந்தாலும், அவைகளை உண்மை என்று எவ்வாறு நிரூபிக்கிறார்கள்? அவர்களின் தத்துவ ஞானத்தின் கோட்பாடுகள் என்ன? - இதையே சாத்தான் விரும்புகிறான். ஜனங்களின் கவனத்தை ஈர்த்து, படிப்படியாக அவர்களை தவறான வழியில் நடத்தி அவர்களின் முழு சிந்தையையும் அவனுக்குள் கொண்டுவந்து தற்காலிகமான விடுதலைகளையும், அதற்கேற்ற கைமாறும், மகிழ்ச்சிகளையும் தடுக்கிறான். இவர்கள் இருளை வெளிச்சம் என்று ஏற்றுக் கொண்டவர்கள். அவர்களுக்கு வெளிச்சம் இருளாகத் தோன்றும். இவர்கள் இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டதின் காரணம் என்ன? இவர்கள் பொறுமையோடு காத்திருக்க சம்மதியாததினாலும், உறுதியான மனநிலையில் இந்த சத்தியத்தைப் பெற்றுக் கொள்ளாததே இதற்குக் காரணமாக இருக்கிறது. சத்தியத்தை அடிப்படையான அன்பில் அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. ஆகவே அவர்களுடைய வாழ்க்கைக்கு சாதகமான, இலேசான காரியங்களை தெரிந்துக் கொள்கிறார்கள். இவர்கள் ஆர்வமூட்டக்கூடிய செய்திகளை அதிகமதிகமாக விரும்புகிறார்கள், அல்லது உடல் ரீதியான நலத்திற்கும், அவர்கள் பிரயாசப்படுகிறார்கள். இவர்கள் இதை நீடிய பொறுமையோடு தாங்கிக் கொண்டிருந்தார்களானால், சகலமும் நித்திய ஆசீர்வாதங்களுக்கு வழி நடத்தியிருக்கும்.

சோதனையின் காலம் அனைவர் மேலும் ஒரேவிதமாக வருவதில்லை. ஏனெனில், முழு கிறிஸ்தவ மண்டலமும், சிந்தையில், குணங்களில், ஆவியில் ஒரு நிலையில் இருப்பதில்லை. கிறிஸ்தவ மண்டலத்தின் மேல் வரும் உபத்திரவம் பொதுவானது என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின நிரூபத்தில் குறிப்பிடுகிறார். (2 தீமோ 3:1-5) இங்கு இந்தக் காலத்திற்குரிய சில சோதனைகளை அவர் சித்தரிக்கிறார். "மகா உபத்திரவத்தின்" காலம் இந்த உலகத்தின் மேல் வருவதாகச் சொல்லப்படுகிறது. இதற்கு அடிப்படையாக இருக்கும் குணம் - சுய நலமும், அதற்கு கருவியாகப் பயன்படுகிறது. பொறுமையற்ற குணமே என்று தீர்க்கதரிசனமாக முன்னறிவிக்கப்படுகிறது. "மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும் சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமை-யுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள் " என்று பவுல் குறிப்பிடுகிறார்.

தெசலோனிக்கேயருக்கு எழுதின நிரூபத்தில் (2 தெச 2:9-12) இந்த உபத்திரவக் காலத்தில் முழு உலகத்திம் மேல் வந்தும், அதன் முழுமையான உச்சக்கட்டத்தை இன்னும் சில வருடங்கள் நீடித்தாலும், அவைகள் கிரியயைச் செய்துகொண்டிருக்கிறது.

ஏனெனில் நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கும் காலமாக இருக்கிறதே. இக்காலத்தின் தீமைகளுக்குப் பிரதானமாகச் செயல்படுகிறவன் சாத்தான் என்பதை அவர் கூறுகிறார். விசேஷமாக இந்த யுகத்தின் முடிவில் சோதனையின் காலத்தில் அவன் முழுபலத்தோடு கிரியை செய்கிறான். "அவனுடைய சகல வல்லமையினாலும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடு இருக்கும். இரட்சிக்கப்படத் தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும்." என்ற காரணத்தையும் அவர் குறிப்பிடுகிறார். "ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத் தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்."

நாம் நம்பக்கூடிய காரியங்கள், குணலட்சணங்கள் அல்லது வரவிருக்கும் மகிமை அனைத்தும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆகவே நாம் இந்தச் சத்தியத்தை எந்தவிதத்திலும் அல்லது எதனுடனும் விட்டுக் கொடுத்து விடக்கூடாது. நாம் வார்த்தைகளை வசனங்களினால் மட்டும் அல்ல ஆவியினாலும் அவைகளின் மேல் அன்போடு பிடித்திருப்பவர்களாக இருக்க வேண்டும். இதுவே உண்மையானதும், அழகானதும், சிறப்பானதுமாக இருக்கும். சத்தியத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் நம்மை யாரும் திசை திருப்பி விடாதபடிக்கு கவனமாக இருக்க வேண்டும். மேலும் இந்த வசனங்களைத் தவறாகப் பயன்படுத்தி நம்மை நாம் வஞ்சித்து, நம்முடைய கண்களை நாமே குருடாக்கிக் கொண்டு, நம்மையே தடை செய்யாதபடிக்கு எச்சரிப்போடிருக்க வேண்டும். ஆகவே நாம் இந்த நீடிய பொறுமையை நமக்குள் வளர்த்து அதை செயல்படுத்துவதின் மூலம் தேவனால் நமக்கு அனுமதிக்கப்படும் சோதனைகள், உபத்திரவங்கள் மற்றும் அனைத்தையும் சந்தோஷமாகச் சகித்து மற்ற குணங்களையும் (மலைப்பிரசங்கத்தில் சொல்லப்பட்டவைகள்) நமக்குள் பரிபூரண அன்பை முழுமையாக வளர்க்கக் கடவோம். ஏனெனில் பரிபூரண அன்பில்லாமல் இந்தக் குணங்களைப் பெறவோ, தக்கவைக்கவோ முடியாது.

## 14. பொறுமை நம்மை தேவனுடைய வழியைவிட்டு விலகச் செய்வதற்கு வாய்ப்புகள் உண்டா?

எபே 5:11 "கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளைக் கடிந்துக்கொள்ளுங்கள்."

**R2155 (col. 1 P6) : -**

விசுவாசம், சகிப்புத்தன்மை, அறிவு - இவையனைத்தும் நன்மையான எந்த முயற்சிக்கும் பொறுமையோடு காத்திருப்பதற்குத் தேவனுடைய ஜனங்களைப் பக்குவப்படுத்துகிறது. எளியோரிடத்திலும், குருடராக இருக்கும் இந்த உலகத்தினிடத்திலும், "கிறிஸ்துவுக்குள் குழந்தையாக" இருப்போரிடத்திலும், மந்தமான மூடர்களிடத்திலும், உணர்ச்சிவசப்பட்டு ஓயாமல் தவறு செய்பவர்களிடத்திலும், அதிகப்பிரசங்கியான பேதுருக்களையும், சந்தேகிக்கும் தோமாக்களையும் நாம் பொறுமையோடே சகிக்க வேண்டும். ஆனால் கனியற்ற அந்தகாரக் கிரியைகள் மற்றும் பாவத்திற்கு இந்தக் கிருபை விலகுகிறது. இப்படிப்பட்ட இடங்களில் நாம் தீமையான எண்ணங்களைக் கடிந்துகொள்ளுதலை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும். ஆனால் மனந்திரும்பிய குமாரனைப் போல் வருபவர்களுக்கு முழுமையான பரிவையும், இரக்கத்தையும் காண்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

## 15. நீடிய பொறுமையை அன்பை விட சிறந்ததாக அப்போஸ்தலன் ஏன் கூறகிறார்?

தீத் 2:2 “முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும், நல்லொழுக்க முள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும் அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாயிருக்கும்படி புத்திசொல்லு.”

2 தீமோ 3:10 “நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும்.”

**R2723 (col.1 P2-col.2 P2) :-**

நம்முடைய பாடத்திற்கு ஏற்ற வார்த்தைகளை தீத்து 2:1-15ம் வசனங்களில் பவுல் குறிப்பிடுகிறார். கிரேத்தா தீவில் உள்ள விசுவாசிகளின் சபைக்கு கண்காணியாக இருந்த தீத்துவுக்கு சில கட்டளைகள் கொடுக்கப்பட்டது. இந்தக் கட்டளைகள் தத்தம் செய்த விசுவாசிகளைத் தவிர வேறோருவருக்கும் பொருந்தாது. குறிப்பாக கிரேத்தாவில் உள்ளவர்கள் ஆறு வகுப்பாராகப் பிரிக்கப்படுகிறார்கள். (1) முதிர் வயதுள்ள புருஷர்கள் (2) முதிர்வயதுள்ள ஸ்திரிகள் (3) வாலிபர் (4) இளம்பெண்கள் (5) கிறிஸ்துவுக்கு சுதந்தரவாளிகள் - ஊழியக்காரர்கள் (6) தீத்து (7) இந்தப் பாடம் சபையில் உள்ள எல்லா வகுப்பினருக்கும் சொல்லப்படும் அறிவுரைகளோடு முடிவடைகிறது.

போதகராக இருந்த தீத்துவுக்கு, ஒவ்வொரு வகுப்பாரைப் பற்றிய சிந்தை தன்னுடைய மனதில் இருந்ததாக, ஞானமாக ஊழியம் செய்து அவர் அவரை அந்தந்த நிலைக்குக் கொண்டுவர பாடுபட்டிருக்க வேண்டும் என்பதைத் தெளிவாக அவருடைய கவனத்திற்கு பவுல் கொண்டுவந்தார். “நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக் கேற்றவைகளைப் பேசு.” என்று சொல்லி, அதற்குப் பின்வரும் சகல கட்டளைகளையும் அதன் அடிப்படையில் தெரியப்படுத்தினார். கிரேத்தா தீவிலிருந்தவர்கள் நல்ல குணலட்சணம் இல்லாதவர்களும், ஞானத்தில் குறைவுள்ளவர்களாகவும் இருந்ததினால், அப்போஸ்தலனாகிய பவுல், இப்படிப்பட்ட அறிவுரையைக் கொடுத்தார் என்று கருதுகிறார்கள். ஆனால் இங்கு கட்டளையாகச் சொல்லப்பட்ட ஒவ்வொரு வார்த்தைகளும் கடைசி காலத்தில் உள்ள நமக்கு, இவ்வளவாகச் சத்தியத்தில் வெளிச்சம் பெற்றிருந்து, எவ்வளவு நேர்த்தியாகப் பொருந்துகிறது என்று பார்க்கலாம்.

முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும், நல்லொழுக்க முள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும் அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாயிருக்க வேண்டும் என்று புத்தி சொல்லுகிறார். அவர்களுடைய வாழ் நாட்களின் அனுபவங்கள் மட்டும் அல்ல, அவர்களுடைய கிறிஸ்துவ ஜீவியத்திலும் அவர்கள் பெற்ற அனுபவங்கள் அவர்களுக்குள் நல்லொழுக்கத்தையும், முதிர்ச்சியையும் கொண்டு வரவேண்டும். இந்த மூன்று குணங்களும் தங்களுடைய அழியக்கூடிய இந்தச் சரீரத்தில் அதிகமாக நிலைத்திருந்தால், அவர்களை புது சிந்தை அருமையாகச் செயல்படும். ஆனால், புது சிருஷ்டிகளுக்கு இதற்குக் கூடுதலாக மற்றும் மூன்று குணங்கள் தேவைப்படுகிறது - தேறின விசுவாசம், முழுமையான அன்பு, நீடிய பொறுமை, அப்போஸ்தலனின் உள்நோக்கத்தின்படி கிரேக்க வார்த்தையில் சொல்லப்படும் விசுவாசம், அன்பு, பொறுமைக்குள் அநேகவிதமான விசுவாசம், அநேக விதமான அன்பு, அநேக விதமான பொறுமை என்றும் அவைகள் என்னென்ன பொருளை உடையது என்றும் குறிப்பிடுகிறார். விசுவாசம், அன்பு, பொறுமை இவைகள் தேவனுடையவைகள் என்றும் “தேவனால் அவர்கள் போதிக்கப்படுவார்கள்”

என்றும் எழுதியிருக்கிறபடி அவருடைய வார்த்தைகளின் மூலம் தம்முடைய ஜனங்களுக்கு இவைகளைக் கட்டளையிடுகிறார் என்றும் நம்முடைய மனதில் பதிய வைக்கும்படி இப்படியாக பிரித்துச் சொல்லியிருக்கிறார்.

ஆவியின் கனியின் வரிசையில் அன்பு முதலாவது இடத்தைப் பிடித்திருந்தாலும், அப்போஸ்தலனாகிய பவுல் தற்செயலாக விசுவாசத்தை முதலில் எழுதவில்லை. ஒருவர் சத்தியத்தின் ஆவியைப் பெறாமல், சத்தியத்தைப் பெறமுடியாது. ஆகவே சத்தியத்தின் முக்கியத்துவம் விசுவாசத்தையே சார்ந்துள்ளது.

ஒரு மனுஷன் எதை நம்புகிறான் என்ற அவசியமில்லை. ஆனால் அவன் என்ன செய்கிறான் என்பது அவசியம் என்று அடிக்கடி நமக்குச் சொல்லப்படுகிறது. இதற்கு முழுமையான விசுவாசமே முக்கியமானது என்று நாம் பதில் அளிக்கலாம். ஏனெனில், இந்த விசுவாசத்தினால் நம்முடைய நடத்தை ஒழுங்குபட்டு, ஊக்குவிக்கப்படும். நாம் பெற்ற சத்தியத்தின் அளவுக்கேற்றபடி நமக்குள் விசுவாசம் இருக்கும். ஏனெனில் நமக்குள் சத்தியம் இருந்தால் மட்டுமே நாம் சுத்திகரிக்கப்படமுடியும் - அதற்குப் பதிலாக நாம் தவறுகளைப்பற்றிக் கொண்டிருந்தால், அவைகள் நமக்குள் இருக்கும் சத்தியத்தைக் கட்டுப்படுத்தி, அதை பலனளிக்கவிடாது. இந்த ஒரு சூழ்நிலையில் நாம் சுத்திகரிக்கப்படுதலின் அளவு குறைந்து கொண்டே போகும். ஆகவே நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நம்முடைய ஆண்டவரின் ஜெபத்தை நினைவில் கொள்ளவேண்டும் - “உம்முடைய வசனமே சத்தியம், உம்முடைய சத்தியத்தினால் அவர்களைப் பரிசுத்தமாக்கும்.”

அதே போல் தற்செயலான அன்புக்கு முன் அவர் பொறுமையை வைக்கவில்லை. இயல்பான வாழ்க்கையில் பொறுமையைக் கற்றுக்கொண்டாலும், எடுத்துக்காட்டாக - உலகப்பிரகாரமானக் குறிக்கோள், ஆசைகளுக்காகக் காத்திருப்பது நம்முடைய இருதயத்தைப் பாதிப்பதில்லை. ஆனால், வெளியிலிருந்து தடைகள் மிகப்பலமாக வரும்போது, அதுவரைக்கும் இருந்த பொறுமை எல்லை தாண்டி முந்தியிருந்த பதற்றத்தை விட பொறுமையற்ற சூழ்நிலை வந்துவிடும். இறுதிவரைக்கும் பொறுமையாக இருப்பது நம்முடைய இருதயங்களில் ஏற்படும் மாற்றமாக இருக்கவேண்டும். நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருக்கும் சுயநலம் என்னும் ஊற்றை, அன்பு என்ற ஊற்றாக மாற்ற வேண்டும்.

இந்தக் குணங்கள் எவ்வளவு மகத்துவமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தினங்களில், இப்படிப்பட்ட குணநலன்கள் உள்ள முதியோர்களைக் காண்பது அரிதாகவே இருக்கிறது. ஆனால் சபைகளில் உள்ள மூத்த சகோதரர்கள் நல்லொழுக்க முள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும், அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாயிருக்க வேண்டும். அவர்களுடைய புதிய சிந்தை தேவனுடைய விசுவாசமுள்ள தேவனுடைய வார்த்தைகளினால் நிறைந்து, அவர்களின் இருதயங்கள் அன்பினால் நிரப்பப்பட்டு, சகலவிதமான நற்குணங்களை வெளிப்படுத்த வேண்டும். இவையனைத்தையும் ஒரே வார்த்தையில் சொல்லப்போனால் பொறுமையாக இருக்க வேண்டும். எல்லா மூத்த சகோதரர்களும் தேவனுக்குமுன் பூரண புருஷர்களாக இருந்து, ஜீவனுள்ள தலையாகிய கிறிஸ்துவின் சரீரத்தின் அளவுக்கு வளர்ச்சியடைந்து, அவருடைய சாயலை தரித்துக்கொள்ள வேண்டும். நம்முடைய சிந்தையில் இந்தச் சாயலை முன்வைத்து நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கைக்கு மாதிரியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**R2791 (COL. 2 P3, 5) – R2792 (col.1 P1):-**

அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய வார்த்தைகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட முறைகள் கிறிஸ்துவ குணங்களில் நீடிய பொறுமையை அன்பைக் காட்டிலும் மேலான இடத்தில் கோடிட்டுக் காட்டுகிறார். பரிசுப்பொருளைப் பெற்றுக்கொள்ள இந்த ஒரு எல்லை வரைக்கும் நாம் ஓடவேண்டியவர்களாக இருக்கிறோம். எடுத்துக்காட்டாக தீத்துவுக்கு (தீத்து) கிறிஸ்துவ மேன்மையானக் குணங்களைப்பற்றி எழுதும்போது விழித்திருந்து, ஜாக்கிரதையுள்ளவர்களாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும், விசுவாசத்தில் உறுதியுள்ளவர்களாகவும், பொறுமையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்கிறார். இந்தக்குணங்கள் அனைத்தையும் பெற்றிருப்பவர்கள் கடைசி பரீட்சையாகிய பொறுமையில் ஜெயிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு, அவரால் ஏற்றுக்கொள்ளப்படும்போது, சந்தோஷத்துடன் சகிக்கும் மனப்பக்குவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

அன்பு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி, நாம் பெறும் பரிசு பொருளுக்கு இலக்காக வைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் இந்த ஒரு குணம் அன்பைவிட சிறந்ததாக நாம் ஏற்றுக்கொள்ள முடியும் என்று கேட்கலாம். இந்தப் பொறுமை நம்முடைய வாழ்க்கையில் ஒரு பகுதியில் மட்டும் செயல்படுவதில்லை. மாறாக, துவக்கம் முதல் முடிவுவரைக்கும் இந்தப் பொறுமை நமக்குத் தேவைப்படுகிறது. ஆதியில் அனுபவிக்கும் உபத்திரவங்களில் நாம் நீடிய பொறுமையோடு இருந்தால், நாட்கள் வேகமாக செல்லும்போது வரும் அதிகமான சோதனைகளில் நாம் நீடிய பொறுமையில் உறுதிப்பட்டவர்களாக ஆவியில் வளர்ச்சியடைவோம். முதலாவது கால் பங்கில், அதற்குப் பின் அரைபங்கு, அதற்குப் பின் முக்கால் பங்கு அதற்குப் பின் பூரணமான அன்பின் வளர்ச்சி நம்மை பரிசுப்பொருளைப் பெற தகுதிப்படுத்துகிறது. நாம் நம்முடைய சிநேகிதர்களை மாத்திரம் அல்ல, சத்துருக்களையும் சிநேகிக்கக் கூடிய அன்பைப் பெற்றுக் கொண்டபின் எதிர்பார்க்கப்பட்ட விசுவாசத்தோடும், சந்தோஷத்தோடும், நீடிய பொறுமையோடும் தேவன் அனுமதிக்கும் கடைசி சோதனைகளில் ஜெயித்துக் காட்ட வேண்டும். ஆகவே அப்போஸ்தலன் - "அனைத்தையும் செய்து முடித்த பின் பொறுமையோடு நிலைத்திருங்கள்", "குறிக்கப்பட்ட நிலையை அடைந்தபின் பொறுமை தன்னுடைய வேலைகளைப் பூரணமாகச் செய்ய அனுமதியுங்கள்". உங்களுக்குள் இருக்கும் நீடிய பொறுமை, நீங்கள் பெறப்போகும் பரிசுக்காக வளர்ந்திருக்கும் அன்பை மட்டும் இல்லாமல், மற்ற குணங்களையும் ஆழமாக வேர்கொண்டு உங்களுக்குள் ஸ்தாபிக்கப்படுவதை நிரூபிக்க எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் சந்தோஷத்துடன் சகிப்பதற்கு உங்களைப் பழக்குவிக்கும்.

ஆம், நம்முடைய ஆண்டவராம் இயேசு இந்தத் தீமையான உலகத்தில் பாடுகளை அனுபவித்ததைப் போல, நாமும் அனுபவிக்க தேவன் செய்த ஏற்பாடுகளை நாம் கண்டோம். இதன் மூலம் நம்முடைய ஆண்டவரின் குணங்களை நமக்குள் ஆழமாகப் பதியவைத்து, நம்மை எந்த விதத்திலும் வீழ்த்தும் காரியங்களுக்கு மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாக நம்மை காத்துக் கொள்ளும்.

## 16. பொறுமை மற்றும் "கிறிஸ்துவுக்குள் நல்ல சேவகனாக தீங்கநுபவிப்பதற்கு" உள்ள தொடர்பு என்ன?

1 பேது 5:10 "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன் தாமே கொஞ்சகாலம்

பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலை நிறுத்துவாராக.

**R1860 (col.2 P1) : -**

ஆண்டவருக்குள் இருக்கும் சகல நண்பர்கள் மேல் வைத்திருக்கும் அளவு கடந்த அன்பும் பரிவும் இருப்பதினால் அப்போஸ்தலன் மிகுந்த அக்கறையுடன் நல்வாழ்த்துக்களோடு இந்த அறிவுரையைக் கூறுகிறார் - (1 பேதுரு 5:10) நாம் கிறிஸ்துவுக்குள் நல்ல போர் சேவர்களாக தீங்கநுபவித்தால் மட்டுமே தேவன் விரும்பும் நிலையை நாம் அடையமுடியும். அதாவது, பூரணமான தன்னடக்கம், தீமையைத் தடுத்து நிற்கும் ஆற்றல், விசுவாசத்தை ஸ்தாபிப்பது, பொறுமை, சிறந்த நல்லொழுக்கத்தோடு கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்து, அவருடைய வாக்குத்தத்தமான வார்த்தைகளில் நம்பிக்கையோடு இருக்க வேண்டும். சந்தேகத்திற்கு இடமின்றி ஆண்டவருடைய ஊழியத்தைத் தொடர்ந்து நடப்பிக்கையில் பேதுருவின் வாழ்க்கையில் நடந்த சொந்த அனுபவங்களாக இருந்தது. அதேபோல் காலப்போக்கில் நாமும் இப்படியாகப் பெற்றுக் கொள்வோம். ஆகவே நாம் ஒவ்வொருவரும் எல்லா குணங்களிலும் பூரணமான சிகரத்தை அடைய முயற்சிப்போம்.

## 17. கிறிஸ்துவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் எப்படிப்பட்ட ஓட்டத்தை ஓடவேண்டும்?

எபி 12:1 “ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம்.”

எபி 6:12 “உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்.”

**R2792 (col.2 P4) : -**

கிறிஸ்தவ மண்டலத்தில் இப்படிப்பட்ட ஆவி வளர நாம் உண்மையில், எதிர் பார்க்கிறோம். கடந்த காலத்தில் அவர்கள் மற்றவர்களைத் தாக்கும் தன்மை இல்லாதவர்களாக மிகுந்த பொறுமையுடன் இருந்திருக்கவேண்டும். நீண்ட காலத்திற்கு முன்னதாகவே அவர்கள் தங்களுடைய கரத்தில் இந்த வேலைகளைச் செய்திருந்தால், உலகம் முன்னதாகவே மனம் திரும்பியிருக்கும் என்று நினைக்கலாம். ஆனால் தேவனுடைய வார்த்தைகளை நீடிய பொறுமையுடன் காத்துக் கொண்டவர்கள், பரத்திலிருந்து வரும் சுத்தமானதும், சமாதானம் கொடுக்கக்கூடியதும், கிருபை நிறைந்ததும், அநேக நற்கிரியைகள் செய்வதும், நீடிய சகிப்புத்தனமையுள்ள, தேவனுடைய ஞானத்தைக் கேட்டு பெற்றுக் கொண்டவர்கள் அனைத்தும் குறித்தக் காலத்தில் நிறைவேறும் என்று நன்கு அறிந்திருக்கிறார்கள். இதை கற்றுக்கொண்டதன் நிமித்தம் நம்முடைய ஆண்டவர் தீமைகளை எதிர்த்து, மனவேதனை அளித்த காரியங்களை ஞானமான நோக்கத்திற்காக அனுமதித்திருக்கிறார் என்றும் எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்துவோடு அவருடைய ராஜ்யத்தில் பங்காளிகளாக இருக்கும்படி, “சிறு மந்தைக்கான” ஆயத்தங்களும் தொடர்ந்து நடந்துக் கொண்டிருப்பதை அவர்கள் உணருவார்கள்.

**R3149 (col.1 P6):-**

இவ்வாறாக, "உங்கள் சிந்தையை கச்சையினால் கட்டி", மன உறுதியோடு நீண்ட நாட்கள் சீராக தொடர்ந்து முயற்சிக்க மேலும் ஆலோசனைகளைக் கூறுகிறார். "தன்னடக்கமுள்ளவர்களாயிருங்கள்" நீங்கள் ஒன்றுக்கும் உணர்ச்சி வசப்பட வேண்டாம். ஒரு சிறிய விஷயத்திற்கு நீங்கள் உணர்ச்சி வசப்படும்போது, நாம் அதுவரைக்கும் பெற்றிருந்த ஆவிக்குரிய சகல கனிகளும் மிகக் குறுகிய நேரத்தில் இழக்கச் செய்யும். மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பி, சோர்வடைந்து நம்மை துன்பத்தில் ஆழ்த்திவிடும். ஆனால் நீண்ட காலம் நீடிய பொறுமையோடிருக்க விசுவாசம் மற்றும் பொறுமையின் சகலவிதமான சோதனைகளையும் ஜெயித்தால் மட்டுமே வாக்குத்தத்தம் செய்த ஆசீர்வாதத்தைப் பெறமுடியும். நமக்குமுன் வைக்கப்பட்டிருக்கும் பந்தயம் வேகமாக ஓடுவதற்கு அல்ல மாறாக "பொறுமையோடு தொடர்ந்து" பயணிக்கவே நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. தன்னடக்கத்தோடும் ஜாக்கிரதையோடும் நமக்களிக்கப்பட்ட விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நாம் சீர்தூக்கிப் பார்த்து, அதன் முக்கியத்துவங்களை உணர்ந்து, அவைகளினால் கிடைக்கும் உற்சாகத்தை எச்சரிப்போடு ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தையினால் கொடுக்கப்பட்ட இந்தக் கட்டளைகளை நல்ல போதகர்கள் மற்றும் ஆசிரியர்களின் உதவியோடு நம்முடைய இருதயத்திலும், சிந்தையிலும் உண்மையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். இவைகள் அனைத்தும் நம்மை வசனங்களை சரியாக தியானிக்கச் செய்து, பொறுமையோடு நம்மை நாம் மனத்தாழ்மையோடு கீழ்ப்படிந்தால், நாம் பெறும் சத்தியம் நமக்குள் தெய்வீக மாற்றத்தை உண்டுபண்ணி, நம்மை மறுரூபபடுத்தும். அதற்குப் பின் சிறிதானாலும், சரி பெரிதானாலும் சரி நம்மால் முடிந்த வரைக்கும், கேட்கும் யாவருக்கும் இராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு நாம் ஒப்புக்கொடுத்த தாலந்துகளை உண்மையாக அவருடைய பணிக்கு செலவழிக்க வேண்டும்.

## 17. நீடிய பொறுமை இருவித பரீட்சையாக இருக்கிறது?

எபி 10:36 "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது."

**C212 (P1): -**

வெகு சீக்கிரத்தில் தங்களுடைய விசுவாசத்தை நிரூபித்தவர்கள் உடனடியாக தங்களுடைய பரிசைப் பெற்றுக் கொள்வார்கள் என்பது பொருள் அல்ல. ஒருவேளை நம்முடைய எதிர்பார்ப்புகளுக்கு எதிரிடையாக இருந்தாலும், சிலர் அந்தகார இரவின் உபத்திரவங்களில் அகப்பட்டவர்களுக்கு இப்படிச் சம்பவிக்கலாம். "இங்கு பரிசுத்தவான்களின் பொறுமை, தேவனுடைய கற்பனைகளையும், இயேசுவின் மேல் உள்ள விசுவாசத்தையும் காத்துக் கொள்ளும்." இந்தத் தீமையான நாட்களில் மிகப் பெரிய தவறுகளும் தைரியமாக ஜனங்கள் மத்தியில் சுற்றிக்கொண்டிருக்கும்போது, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொண்டவர்களாகத் தைரியத்தோடும், எல்லா தெளிவோடும் சத்தியத்திற்காக நின்று ஊக்கமளிக்கக் கூடிய அறிவுரைகளைத் தரித்தவர்களாக, நம்மைப் பாதுகாத்துக்கொள்ள ஆவியின் பட்டயத்தை எப்போதும் கையில் பிடித்தவர்களாக சகல பரிசுத்தவான்களுக்காகச் சொல்லும் ஜெபங்களோடு நாம் நிற்கவேண்டும். வாக்குத்தத்தங்களைப் பெறும்படியாக தேவனுடைய சித்தத்தை செய்து முடித்தாலும் அவைகளைப் பெற்றுக் கொள்ள நீடிய பொறுமையோடு காத்திருக்க வேண்டும். வெளி 14:12, எபே 6:13, எபி 10:36

**R2791 (col. 1 P2,3): -**

நம்முடைய பாடம் நீடிய பொறுமையைக் குறித்திருப்பதினால், நம்முடைய ஆண்டவரின் போதனை அல்லது வார்த்தைகளைக் குறித்துப் பார்க்கலாம். அவர் இரண்டு முறை இந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். லூக்கா 8:15ல் விதைக் கிறவனுடைய உவமையில் - "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்தில் ஏற்றுக் கொள்வதற்கு, கனி கொடுக்கக்கூடிய வகுப்பாராக நிரூபிக்கப்படுவதற்கு மிகுந்த பொறுமையோடு இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். ஏனெனில் பாறையில் விழுந்த விதைகளை - முதலில், மிகுந்த சந்தோஷத்துடன் வசனத்தை ஏற்றுக் கொண்டார்கள், ஆனால் வெயிலின் உஷ்ணம் அதிகரித்தபோதோ, அவைகள் தீய்ந்து போய்விட்டது. இவர்கள் தேவனுடைய வசனத்தை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டாலும், அவர்களுக்குள் பொறுமை-யில்லாததினால், உபத்திரவங்கள் வரும்போது அவர்கள் அதில் நிலை நிற்க முடியாமல் போய்விடுகிறது. இவர்கள் என்றுமே இராஜ்யத்தின் வகுப்பாராவதற்கு வாய்ப்பில்லை.

நீடிய பொறுமையே இறுதி பரீட்சை என்று நம்முடைய ஆண்டவர் இந்த உவமையின் மூலமாக நமக்கு எடுத்துக்காட்டுகிறார். விதைகளைப் பெற்றுக் கொள்ளும் நல்ல நிலம், முளை கிளம்பி அன்பு, நம்பிக்கை, மகிழ்ச்சி மற்றும் விசுவாசத்தினாலும் நல்ல பலன்களைத் தருகிறது. அதற்குப் பின் இருக்கும் நீடிய பொறுமை அந்தக் கனிகளை மேலும் வளர்ச்சியடையச்செய்து, களஞ்சியத்தில் சேர்க்க தகுதி பெறுகிறது. நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளில் நீடிய பொறுமை என்ற குணத்திற்கு எவ்வளவு வெளிச்சம் வீசப்படுகிறது பாருங்கள். இந்த நீடிய பொறுமை இல்லாத சூழ்நிலையில் "உம்முடைய சித்தத்தைச் செய்ய அடியேன் வருகிறேன்" என்று சொன்ன ஆண்டவரின் சாயலை அணிய முடியாது. இராஜரீகமான ஆசாரிய வகுப்பாருக்கு நம்முடைய ஆண்டவர் தங்களுடைய சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பதற்கு மாதிரியை விட்டுச் சென்றிருக்கிறார். அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றும் நாம் சத்தியத்திற்காக நம்முடைய சகோதரர்களுக்கு நம்முடைய ஜீவனைக் கொடுக்கும் மன நிலையைக் கொண்டவர்களாக இருக்கிறோம். மேலும், இந்தப் பலிகளை இயேசுவின் ஈடுபலியின் மூலம் ஏற்றுக்கொள்ளும் தேவன் - முழு மனதோடும், சந்தோஷத்துடனும் செலுத்தப்படும் பலிகளில் அவர் மகிழ்ச்சியடைகிறார்.

**R2792 (col. 1 P2): -**

பொறுமை மற்றும் சந்தோஷத்துடன் சகிப்புத் தன்மையின் முக்கியத்துவங்களை நாம் பார்ப்பது நமக்கு மிகவும் உதவியாக இருக்கும். ஆகவே புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தைகள் இருக்கும் மற்ற இடங்களையும் நாம் கவனிப்போம். பவுல் - "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறுவதற்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது." என்று குறிப்பிடுகிறார். இந்த இடத்திலும் தேவனுடைய சித்தம் செய்வதை சோதனையாக வைக்காமல், அதை செய்து முடித்தப்பின் நம்முடைய இருதயத்திலும், விருப்பத்திலும் நாம் நீடிய பொறுமையோடிருந்து, தேவனுடைய நீதியை எந்தச் சூழ்நிலையிலும், சந்தர்ப்பங்களிலும், நம்முடைய இருதயத்தின் கோட்பாடாக ஸ்தாபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்போது நம்முடைய மனநிலை இராஜ்யத்திற்கு ஏற்றதான நிலையில் வரும். "உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்." (யாக்கோபு 1:3) என்று யாக்கோபு குறிப்பிடுகிறார். அதாவது நீங்கள் விசுவாசத்தில் சோதிக்கப்பட்டால், உங்களுக்கு தேவையான பொறுமை தானாக

வந்துவிடும். என்று சொல்லுகிறார். ஒருவேளை நமக்கு பொறுமை இல்லை என்றால், நாம் இன்னும் விசுவாசத்தின் பரீட்சைகளுக்கு நில்லாதவர்களாக இருப்பதால், இராஜ்யத்திற்கும் உகந்தவர்கள் அல்ல என்று பொருள்படும்.

## 19. "அவருடைய வார்த்தையின் பொறுமையைக் காத்துக் கொள்பவர்களுக்கு" தேவன் அளித்த வாக்குத்தத்தம் இன்று எவ்வாறு நிறைவேறுகிறது?

வெளி 3:10 "என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக் கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்."

**R2792 (col.1 P6-col.2 P4): -**

நம்முடைய தேவன் லவோதிக்கேயா சபையோரை துன்பங்களுக்கு அனுமதிக்காமல் காப்பாற்றவில்லை என்றாலும், "பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனங்களை காத்துக்கொள்வோரை" தேவன் காத்துக்கொள்வார். எனெனில் - "ஒருவன் என் சத்தத்தை கேட்டு கதவை திறப்பானானால், நான் அவனோடு வந்து போஜனம் பண்ணுவேன்" என்று நமக்கு வாக்களித்திருக்கிறார். இக்காலத்தில், இந்த ஓட்டத்தை பொறுமையோடு ஓடுபவர்களுக்கு தேவன் கொடுக்கும் பரிசாகும். அதே சமயத்தில் இப்படிப்பட்ட சோதனையின் காலத்தில் நாம் தப்பித்துக்கொள்ள முயற்சிக்காமல், இயேசுவின் பிரசன்னத்தில், அதற்கேற்ற ஆசீர்வாதங்களைப் பெறும் சிறப்புரிமைகளைப் பெற்றிருக்கிறோம் என்பதை உணரவேண்டும். ஆகவே நாம் அவருடைய கட்டளைகளைப் பெற்று, அவருடைய ஐக்கியத்தில் இதுவரை எந்த விசுவாசியும் அனுபவித்திராத காலத்திற்கேற்றப் போதனைகளை உட்கொள்ளுவோம். ஆனால் நாம் எதிர்பார்த்தபடி நாம் பெறும் அதிகமான தேவனுடைய இரக்கங்களின் மத்தியில் இதற்குச் சரியான பாடுகளும் கடுமையானச் சோதனைகளும், இந்த முழு பூமியின் மேல் வரப்போகிறது.

நாம் இதுவரையில் நீடிய பொறுமையாக இல்லாவிட்டாலும் இப்பொழுது அதை கடைபிடிப்பது மிக அவசியம். "உங்கள் ஆத்துமாக்களில், பொறுமையை தக்க வைத்துக்கொள்ளுங்கள்" இதுவே இப்போது மிகப் பொருத்தமானது. இந்தப் பந்தயத்தை மிகப்பொறுமையோடும், முழு விருப்பத்தோடும், வாஞ்சையோடும் ஓடுபவர்கள் வரக்கூடிய "தீமையான காலத்தில்" விசுவாசத்திற்குள் நிலை நிற்க முடியும். மற்ற யாரும் நிற்க முடியாது. ஏனெனில் அப்போஸ்தலனாகிய பவுல் - "அது அக்கினியிலே வெளிப் படுத்தப்படும், அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்." (1 கொரி 3:13) என்று குறிப்பிடுகிறார்.

கடைசி காலத்தில் அனுமதிக்கப்படுகிற சோதனை விசேஷமாக நம்முடைய நீடிய பொறுமை காணப்படுவது மிகவும் அரிதாக இருக்கிறது. மேலும், நாகரீகம் நிறைந்த இந்த உலகத்தில் நீடிய பொறுமை காணப்படுவது மிகவும் அரிதாக இருக்கிறது. ஐம்பது வருடங்கள், அல்லது நாற்பது வருடங்கள், அல்லது முப்பது வருடங்கள் அல்லது இருபது வருடங்கள் அல்லது பத்து வருடங்களுக்கு முன்னிருந்த பொறுமையோடு இந்நாளில் இருக்கக்கூடிய பொறுமையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அது நாளுக்கு நாள் குறைந்துக் கொண்டு வருகிறதை நாம் பார்க்கலாம். நீதியின் நிமித்தமாகவோ, கிறிஸ்துவுக்காகவோ அல்லது மற்றவர்களுக்காகவோ ஒருவரும் பொறுமையாக இருப்பதற்கு விரும்புவதில்லை. ஒருவேளை கொஞ்சநேரம் பொறுமையாக இருந்துவிட்டால் அதில் அநேக முறு முறுப்புகளோடு, பொறுமை இழந்த நிலையில் காணப்படுகிறார்கள். மேலும், இந்த

நாகரீகம் நிறைந்த உலகத்தில், பொறுமையற்ற நிலை மற்றும் பொறுத்துக் கொள்ளாத ஒரு குணங்கள் பொதுவாக அனைவரிடமும் காணப்படுவதினால், இடுக்கமான வழியில் பிரவேசிப்பவர்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். இவர்கள் தெய்வீகக் கிருபையைப் பெற்றிருந்தால் மட்டுமே வளர்ச்சியடைய முடியும்.

நமக்குத் தேவைப்படும் தெய்வீகக் கிருபை, தெய்வீகத் திட்டத்தின் ஞானத்தின் வழியாக நமக்கு கொடுக்கப்படுகிறது. இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாமல், தேவனை அணுகாமல் இருப்பவர்களுக்கு இந்தக் கிருபை அளிக்கப்படுவதில்லை. இதன் காரணமாக, கிறிஸ்துவின் சீஷராக இருக்கக்கூடிய அநேகர் நீடிய பொறுமையை காலப்போக்கில் இழந்துவிடுகிறார்கள். ஐரோப்பாவில் ஜனக்கூட்டத்தினால் ஏற்பட்ட கலவரத்தை இராணுவ படை அடக்கியது. ஆனால் விசாரணை இல்லாத தீர்ப்புகள் அத்தேசத்தில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அவர்களின் பொறுமையற்ற நிலையை வெளிப்படுத்துகிறது. சாத்தான் முழுமையாகக் கட்டப்பட்டு, தீமைகளைக் கட்டுப்படுத்தி, தேவனுடைய இராஜ்யம் பகிரங்கமாக ஸ்தாபிக்கப்படும் வரையில் தேவன் இந்தத தீமையின் மேல் நீடிய பொறுமையுள்ளவராக இருப்பார்.

உண்மையில், இப்படிப்பட்ட ஆவி கிறிஸ்துவ மண்டலத்தில் வளரவேண்டும் என்று நாம் எதிர்ப்பார்க்கலாம். கடந்த காலத்தில் வாழ்ந்தவர்கள் ஓரளவுக்கு நற்குணங்களோடு இருந்ததினால், சீர்பொருந்துதலின் காரியங்களை அவர்களே தங்களுடைய சொந்த முயற்சியினால் செய்திருந்தால் இந்த உலகம் சீர்திருந்தியிருக்கலாமே! என்று எண்ணலாம். ஆனால் தேவனுடைய வார்த்தைகளை நீடிய பொறுமையோடு காத்துக் கொள்பவர்கள், சர்வவல்லவரிடமிருந்து ஞானத்தைப் பெற்றவர்கள் குறித்தக் காலத்தில் தேவனுடைய திட்டங்கள் இந்தப் பொறுமையில் வளர்ச்சியடைந்தால், நம்முடைய ஆண்டவர் தீமையையும், அதின் பாதிப்புகளையும், தவறுகளையும் அதன் உபத்திரவங்களை சந்தோஷமாகவும், நீடிய பொறுமையோடும் சகித்தது போல, நாம் இருக்கவேண்டும். ஏனெனில், தேவன் இவையனைத்தையும் அனுமதித்ததோடு மட்டும் அல்ல, அவர் சகலத்தையும், தேவனுடைய இராஜயத்தில் கிறிஸ்துவோடுகூட ஆயிரவருஷம் ஆட்சிசெய்யும் "சிறு மந்தையை" அவர் அழைத்து ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் மிகப்பெரிய நன்மையான நோக்கத்திற்காகவே செயலாற்றுகிறார் என்பதையும் உணர்ந்து கொள்ளலாம்.

## 20. பொறுமைக்கு மாதிரியாக இருக்கும் இயேசுவிடம் நாம் என்ன பாடங்ககளைக் கற்றுக்கொள்ளலாம்?

எபி 12:3 "ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, நமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்".

**R2313 (col. 2 P2): -**

நம்முடைய ஆண்டவர் நமக்காக நீடிய பொறுமையோடு பட்ட அவமானங்களை எண்ணுகையில் நம்முடைய நெஞ்சைத் தொடுகிறது. மேலும் அதைத் தொடர்ந்து தியானிக்கும்போது, நாம் மனம்வருந்தி, சீர்பொருந்துவதற்கு ஏதுவாக இருக்கிறது. நம்முடைய ஆண்டவரை ஏற்றுக் கொண்டு, உணர்வுப்பூர்வமாக அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டவர்களிடத்தில் இந்த வல்லமை குறைந்து போவதுமில்லை. இந்த சிந்தனை நம்மை உருகவைக்கும். ஏனெனில் அவர் நமக்காக செலுத்தின பலியினாலும், அவருடைய பாடுகளினாலும் உபத்திரவத்தினாலும் நாம் ஜீவனைப்

பெற்றிருக்கிறோம். ஆகவே இயேசுவைப் பின்பற்றுபவர்கள் நீடிய பொறுமையோடும், சாந்தத்தோடும், கிறிஸ்துவுக்காக அனுபவிக்கும் துன்பத்திலும், அநீதியின் நிமித்தம் வரும் பாடுகளிலும், சோர்ந்துப் போகாமல் அனைத்தையும் சகிக்க நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை நினைத்துக் கொள்ளும்படி நமக்கு பாடம் கற்பிக்கிறார். (எபி 12:3) ஐசுவரியவானாக இருந்த அவர் நமக்காக தரித்திரரானாரே என்றும், நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ள அவர் மனப்பூர்வமாக தம்முடைய ஜீவனையே கொடுத்தாரே என்றும் மீண்டுமாக, அப்போஸ்தலர் கிறிஸ்துவின் பாடுகளைக் குறிப்பிடுகிறார். இப்படியாக "நாமும் சகோதர்களுக்காக நம்முடைய ஜீவனைக் கொடுக்க மனப்பூர்வமாக சம்மதிக்க வேண்டும்.

**R2879 (col.2 P2): -**

பொதுவாக போராடுகிற ஜனங்கள் (மாம்சத்தில்) பழிவாங்கும் உணர்வுள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால் நம்முடைய ஆண்டவரிடத்தில், சுயகட்டுப்பாடு, சாந்தம், சகோதர சிநேகம், பரிவு, இரக்கத்தையும் கற்றுக்கொண்டவர்கள் - "தீமைக்குப் பதிலாகத் தீமை செய்யவேண்டாம்" - என்ற காரியத்தைச் செய்ய ஆயத்தப்பட்டவர்களாக இருப்பார்கள். நம்முடைய ஆண்டவர் வையப்படும்போது பதில் வையாமலிருந்தார் என்பதை அவர்கள் மாதிரியாக நோக்குவார்கள். அவர் பாவம் செய்து விட்டு, அதற்காக அவர் மௌனமாக இருந்தார் என்பது பொருள் அல்ல, மேலும், அவருடைய எதிரிகள் பூரணமாக இருந்தபடியால் அவரால் ஒன்றும் பேசமுடியவில்லை என்பதும் பொருள் அல்ல. அவர் தன்னை முழுமையாக தெய்வீக சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்திருந்தபடியால், ஜனங்களுடைய இகழ்ச்சியையும், தூஷணங்களையும் பொறுமையோடும், தாழ்மையோடும் சகித்தார். அழைக்கப்பட்டவர்களும் நீடிய பொறுமையுள்ளவர்களாக வாழ்ந்து, இப்படிப்பட்ட பாடங்களைக் கற்றுக்கொண்டு, நம்முடைய விசுவாசத்தை மெய்ப்பித்து, இயேசுவின் உண்மையான குணலட்சணங்களை நமக்குள் வளர்த்து, நம்முடைய வாழ்க்கையில் செயலாற்றி, அவர் ஜனங்களிடத்தில் இரக்கமுள்ளவராக இருந்ததுப்போல, நாமும் குருடராகவும், அறியாமையிலும் இருக்கக்கூடிய ஜனங்களுக்கு இரக்கம் பாரட்ட வேண்டும்.

ஆண்டவரின் குணலட்சணங்களில் வளர்ச்சியடைபவர்கள் , தங்களை இகழ்வோரையும், தூஷிப்பவர்களையும் பொருட்படுத்தமாட்டார்கள். அனைத்தையும் இழந்தாலும், பாடுகளை சந்தோஷமாக அனுபவிக்க ஆயத்தமாக இருப்பார்கள். ஆகவே இக்காலத்தில் உங்கள் உபத்திரவங்களில் சந்தோஷமாகக் களிகூறுங்கள், ஏனெனில், இந்தப் பாடுகள் நாம் பெறப்போகிற மிகப்பெரிய மகிமைக்காக இன்று அனுமதிக் கப்படுகிறது. "உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களை துன்பப்படுத்து பவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்" என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளோடு பேதுருவின் வார்த்தைகள் எவ்வளவு இசைவாக இருக்கிறது. (பிலி 3:8, 2 கொரி 4:17, மத் 5:44, ரோமர் 12:14) ஆகவே நாம் மற்றவர்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் வலியுறுத்துகிறார். ஓட்டப்பந்தயத்தின் இறுதி கட்டமாகிய இந்தக் குணத்தை நாம் இன்னும் பெறாமலிருந்தால், பூரண அன்பின் குறிப்பாக - நம்முடைய எதிராளிகளையும் சிநேகிக்கும் அன்பும், அவர்களை மனமுவந்து ஆசீர்வதிக்கும் உணர்வு, அவர்களுக்கு உதவி செய்யும் மனப்பக்குவம், அவர்களை இருளிலிருந்து தூக்கிவிடும் விருப்பம், மற்றும் அனைத்துக் காரியங்களும், தேவனுடைய தெய்வீகத் திட்டத்திற்கு இசைவாக இல்லாவிட்டாலும், நாம் தொய்ந்து போகவேண்டாம். வெகு சீக்கிரத்தில் இந்த இலக்கை எட்டிப்பிடிக்க நாம் முயற்சிப்போம். ஏனெனில், நிச்சயமாக ஓர் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

## R2616 (col. 2 P1): -

அப்போஸ்தலர் சில உபதேசங்களைச் சொல்லிவிட்டு, அதை நீடிய பொறுமையோடு சகித்தால், தேவனுடைய உண்மையான ஊழியக்காரர்கள் என்ற நிலையைப் பெறுவோம் என்று அறிவிக்கிறார் - "மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும், அடிகளிலும், காவல்களிலும், கலகங்களிலும், பிரயாசங்களிலும், கண்விழிப்புகளிலும், உபவாசங்களிலும், கற்பிலும், அறிவிலும், நீடியசாந்தத்திலும், தயவிலும், பரிசுத்தஆவியிலும், மாயமற்ற அன்பிலும், சத்தியவசனத்திலும், திவ்விய பலத்திலும், நீதியாகிய வலதிடது பக்கத்து ஆயுதங்களைத் தரித்திருக்கிறதிலும், கனத்திலும், கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும், எத்தரெனப்பட்டாலும் நிஜஸ்தராகவும், அறியப்படாதவர்களென்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும், துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும், அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப் பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப் பண்ணுகிறோம்" (2 கொரி 6:4-10) நம்முடைய ஆண்டவர் உண்மையானவராக இருக்கும் பட்சத்தில், எப்பேர்பட்ட வஞ்சகன் என்று நினைக்கப்பட்டார். ஒளியின் பிரபுவாக இருக்கும்போது, அவர் பெயல்செபூலுக்கு தலைவன் என்று அழைக்கப்பட்டார். இப்படிப்பட்ட பழிகளை எவ்வளவு நீடிய பொறுமையோடு சகித்தார். அவரை பின்பற்றுகிற நாம் அனைவரும் சாத்தானின் நயவஞ்சகத்தினால் தவறாக குற்றம் சாட்டப்படும்போது, இப்படிப்பட்ட துன்பங்களை பொறுமையோடு சகிக்க கட்டாயமாக எதிர்பார்க்கப்படுகிறோம். இப்படிப்பட்ட துன்பங்கள் நம்முடையப் பாடுகளின் ஒரு பகுதி என்று நம்முடைய பிதாவாகிய தேவன் கூறுகிறார். ஏனெனில் - "என்னிமித்தம் உங்களை நிந்தித்து துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு, களிகூறுங்கள், பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" என்று இயேசு குறிப்பிட்டார்.

## R3543 (col. 2 P2) : -

நமக்கு எதிராக இருப்போரிடம் நாம் எப்படியாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை நம்முடைய ஆண்டவர் யூதாஸோடு நடந்து கொண்ட விதத்தைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது, அதை மட்டும் அல்ல, அவர்கள் மனந்திரும்புவதற்கு நாம் செய்யவேண்டிய இறுதி முயற்சிகளையும் நமக்கு பாடமாக அங்கு வைத்திருக்கிறார் என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். மேலும், இயேசு தம்முடைய சீஷர்கள் கெட்டுப்போகாமலிருக்க நீடிய பொறுமையோடிருந்து, அவர்களை கடைசிவரைக்கும் செம்மையானப் பாதையில் வழி நடத்தி, அவர்களின் தவறுகளைத் திருத்தி, சீஷர்களாக மாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, சகல நன்மையான சூழ்நிலைகள் மத்தியிலும், தங்களுக்குள் இருக்கும் சுய நலத்தை வளர்த்து, மிகக் கடுமையானவர்களாக மாறுபவர்கள் ஆண்டவருடைய நேரடியான கண்டிப்பைக் கூட உணராமல், வசனங்களினால் எந்த மாற்றத்தை தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளாமலிருப்பார்கள் என்ற பாடத்தையும் நாம் இதிலிருந்து கற்றுக்கொள்ளலாம். "அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்" என்ற பவுலின் வார்த்தைகளை இங்கு நாம் நினைவுகூறலாம். தேவனுடைய ஆவியை முழுமையாக தங்களுடைய இருதயத்தில் உள்ள சுய நலத்திற்காக முழுமையாக பயன்படுத்தும் போது, அவர்களை என்றுமே மனந்திருப்ப முடியாது.

## 21. வேத வசனங்களில் பொறுமையைப்பற்றி குறிப்பிடப்பட்ட மற்ற எடுத்துக்காட்டுகள் என்னென்ன?

யாக் 5:10,11 “என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுத்தலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள். இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கிய-வான்களென்கிறோமோ, யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள், கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள், கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே.”

2 கொரி 6:4-10 “மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும், அடிகளிலும், காவல்களிலும், கலகங்களிலும், பிரயாசங்களிலும், கண்விழிப்புகளிலும், உபவாசங்களிலும், கற்பிலும், அறிவிலும், நீடியசாந்தத்திலும், தயவிலும், பரிசுத்தஆவியிலும், மாயமற்ற அன்பிலும், சத்தியவசனத்திலும், திவ்விய பலத்திலும், நீதியாகிய வலதிடதுபக்கத்து ஆயுதங்களைத் தரித்திருக்கிறதிலும், கனத்திலும், கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும், எத்தரெனப்பட்டாலும் நிஜஸ்தராகவும், அறியப்படாதவர்களென்னப்பட்டாலும் நன்றாய் அறியப் பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும், துக்கப் படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும், அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப் பண்ணுகிறோம்” (2 கொரி 12:12) “அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே.”

## 22. பொறுமை என்ற குணம் ஒரு மூப்பருக்கு அவசியமா?

1 தீமோ 3:3 “அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பணஆசையில்லாதவனுமாயிருந்து ”

**F251 (P2):-**

“நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும். போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்றும், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரவானாயிருக்கிறான் என்றும் வேதவாக்கியம் சொல்லுகிறதே.” (1 தீமோ 5:17,18) என்று வாசிக்கிறோம். இந்த வசனத்தில் அடிப்படையில் பேர் சபைகள் தங்களை ஆட்சி செய்யும் மூப்பர் வகுப்பினரைத் தெரிந்தெடுக்கிறார்கள். இவர்கள் மற்றவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்த, அதிகாரம் பெறுகிறார்கள். இப்படிப்பட்ட ஓர் “ஆளுகை முறை” வேதவசனங்களுக்கு முரண்பாடாக இருக்கிறது. “முதிர்வயதுள்ளவனைக் கடிந்து கொள்ளாமல், அவனைத் தகப்பனைப் போல நடத்து” என்றும் “கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல் , எல்லாரிடத்திலும் சாந்த குணமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும்” என்று மூப்பராக இருந்த தீமோத்தேயுவுக்கு அறிவுரை சொல்லப்பட்டது. இவைகளை நாம் பார்க்கும்போது, சாந்த குணமுடையவராகவும், நற்பண்புகள் உள்ளவராகவும், நீடிய

பொறுமையுள்ளவராகவும், சகோதர சிநேகம் உள்ளவராகவும், அன்புள்ளவராகவும் இருந்தால் மட்டுமே அதிகாரம் பெற்ற ஒரு மூப்பராக இருக்கமுடியும். இவர்கள் நிச்சயமாக மந்தைக்கு ஒரு நல்ல மாதிரியாக இருக்கவேண்டும். ஒருவேளை அந்த மூப்பர் அதிகாரம் செலுத்துபவராக இருந்தால், மந்தையும் அதிகாரம் செலுத்தக்கூடியவர்களாக மாறுவார்கள். அதே மூப்பர் சாந்த குணமுள்ளவராகவும், நீடிய பொறுமையுள்ளவராகவும், அன்புள்ளவராகவும் இருந்தால் மந்தையும் அதே குணத்தில் வளர்ச்சியடைவார்கள். சொல்லப்போனால், மூப்பர்கள் தங்களுடைய பொறுப்புகளை எவ்வளவு விசுவாசத்தோடு செயலாற்றுகிறார்களோ அவ்வளவு கனத்தை நாம் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். ஆகவே நாம் மீண்டுமாக மேற்சொல்லப்பட்ட வசனங்களை நினைவுக்கூறுவோம் - “நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை , விசேஷமாக திருவசனத்திலும் , உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திராக எண்ணவேண்டும்.”

**F298 (P 1,2): -**

இங்கு சொல்லப்படும் அறிவுரைகள் மூப்பர்களுக்கு மட்டும் அல்ல, முழு சபைக்கும் இது பொருந்தும், முழு சபையும் தேவனுடைய புது சிருஷ்டிகளாக இருந்தாலும், மாம்சத்தில் அபூரணமாக இருக்கும் நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மட்டுமே தேவனுக்கு முன்பாக பூரணராக நிற்கமுடியும். மேலும், நாம் அனைவரும் நம்முடைய அபூரண நிலையில் அவரவர் பலவீனங்களின் அடிப்படையில் நாம் வித்தியாசப்படுகிறோம் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். பூமிக்குரிய பிள்ளைகள் திருந்துவதற்கு வித்தியாசமான முறைகள் கையாளப்படுகிறது. அதேபோல் நம்முடைய பரலோகப் பிதாவும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான வழி நடத்துதலைத் தருகிறார். மற்றவர்களுடைய அபூரணத்தை நாம் கவனித்து, அதை விமர்சிக்கும்போது, நமக்கு நாமே அதிகமான கேடு வருவிப்பவர்களாக மாறிவிடுவோம். நம்முடைய பலவீனங்களைக் காண நம்முடைய கண்கள் குருடாக்கப்பட்டுவிடும். அப்போஸ்தலரின் அறிவுரைகளின் உள் நோக்கத்திற்கு இப்படிப்பட்ட ஆவி எதிரிடையாகவே இருக்கிறது.

சத்திய ஆவியினாலும், பரிசுத்த ஆவியினாலும், சாந்தத்தின் ஆவியினாலும், அன்பின் ஆவியினாலும் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள், கிருபையின் ஆவியில் வளர்ச்சியடைவார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய குற்றங்களை மட்டுமே கவனித்துக் கொண்டிருப்பார்களே தவிர மற்றவர்களைக் குறைகூறுவதற்குக் கூட அஞ்சுவார்கள். மேலும், அவர்கள் மற்றவர்கள் மேல் வைக்கும் அன்பினால் அனைவரையும் மன்னிக்கக்கூடிய சுபாவத்தைப் பெற்றிருப்பார்கள். இதினிமித்தம் இவர்களின் குறைகள் இயல்பாகவே மன்னிக்கப்படும். ஆனால் அன்பின் ஆவி சகோதரர்களின் குற்றங்களையும், குறைகளையும் மன்னிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு நன்மை உண்டாக நாம் மிகுந்த சண்டையோடும் அல்லது போராடியும் அல்ல மாறாக, பொன்னான (தெய்வீக) சட்டத்திட்டத்தோடு நாம் செயல்படவேண்டும், தயவோடும், சாந்தத்தோடும், நீடிய பொறுமையோடும், நாம் ஒருவருடைய குற்றத்தை ஒருவர் மன்னிக்கவேண்டும். அதேசமயம் அதே பலவீனத்தில் இருப்போரை நாம் வெளியே வந்ததுபோல, அவர்களையும் அதிலிருந்து வெளிவர உதவி செய்ய வேண்டும்.

## 23. நாம் நீடிய பொறுமையை எப்படி வளர்த்துக் கொள்வது?

(**a**) ஜெபத்தின் வழியாக

**R2005 (col.2 P8) – R2006 (col.1): -**

இதை தொடர்ந்து நாம் விசேஷமாக பார்க்கும்போது, ஜெபத்திற்கான சிறப்புரிமை அல்லது தேவனிடத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் எந்தவிதமான கிருபைகளும் சுயநலமானக்காரியத்திற்கு அனுமதிக்கப்படுவதில்லை. உகந்த காரியத்தை விரும்பி அதை கேட்கும் பட்சத்தில், அதே காரியம் மற்ற நோக்கத்துடன் கேட்கும்போது அது தவறாகக் காணப்படும். ஆகவே நம்முடைய சகோதரர்கள் மத்தியில் நாம் மகிமைப்படும்படி எந்த நன்மையானக் காரியங்களை தேவனிடத்தில் விண்ணப்பித்தாலும், அது தவறாகும். ஏனெனில் அந்த நோக்கம் தவறானதாக இருக்கிறது.

ஆகவே நம்முடைய வசதிக்காகவும், சௌகரியத்திற்காகவும், நன்மையானக் காரியங்களை விரும்புவது தவறு. இப்படிப்பட்டவர்களைக் குறித்து அப்போஸ்தலர் ஶ்ரீ "நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்." (யாக் 4:3) சோதிப்பதற்காக நாம் ஏதோ நன்மையான காரியத்தைக் கேட்டு, அதற்குப் பின் நம்முடைய விசுவாசத்தை ஸ்தாபிப்பது போன்ற காரியங்கள் ஒழுங்கற்ற செயலாகும். ஆனால் முழுமையான விசுவாசிகளுக்கு அனைத்தும் வாக்களிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், தேவனுடைய திட்டத்தைப் பொறுத்தவரையில், நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே அங்கீகாரம் பெறாத எந்தக் காரியத்தையும் நாம் விண்ணப்பிக்கக்கூடாது. நம்முடைய வேண்டுதல்கள் அனைத்தும் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவே இருக்கவேண்டும். ஆவிக்குரிய காரியங்களுக்காக நாம் வேண்டுதல் செய்தாலும், அவைகள் இன்னவிதத்தில் நாம் பெற்றுக்கொள்வோம் என்று எதிர்பார்க்கக்கூடாது. அதாவது நம்முடைய ஜெபங்களுக்கானப் பதிலை எந்தவிதமான அற்புதத்தின் வழியாக அல்ல இயற்கையான முறையிலேயே நாம் எதிர்பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இயற்கையான வழிகள் குறைவுபடும்போது இயற்கைக்கு அப்பாற்பட்ட முறைகளை தேவன் பயன்படுத்துவார்.

நாம் பரிசுத்த ஆவியைப் பெறுவதற்காக வேண்டுதல்களும், விண்ணப்பங்களும் உடனடியாகப் பதில் அளிக்கப்படும் என்று நாம் உறுதியளிக்கப்படுகிறது. "பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்." (லூக் 11:13)

அநேகர் சந்திக்கும் பிரச்சனை என்னவெனில், கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தைகளையும் காத்து நடப்போரின் ஆவிக்குரிய தேவைகளுக்காக தேவன் சேர்த்துவைத்திருக்கும் தெய்வீக கிருபைகளைப் பயன்படுத்தாமல் விட்டுவிடுவதேயாகும். அனைத்து ஜெபங்களும் சுய நலமானவைகள் என்று ஒருவரும் கருதவேண்டாம். இதற்கு எதிராக நாம் தேவனுடைய சித்தத்தின்படியும் அவருடைய வார்த்தைகளின்படியும், நாம் ஜெபிப்பதற்கு முழு சுதந்திரம் பெற்றிருக்கிறோம்.

விசுவாசம் மற்றும் பொறுமையை சோதிக்கும் ஒவ்வொரு சோதனையும் நமக்களிக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்களை நினைவுக்கூறும் ஜெபங்களை ஏறெடுப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமைகிறது. ஒவ்வொரு தோல்வியும் வெற்றி பெறுவதற்காகவும், மன்னிப்பைப் பெறுவதற்காகவும், தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காகவும் ஜெபிக்க வாய்ப்பாக இருக்கிறது. நம்முடைய பலவீனங்களுக்காகவும்,

அடுத்தமுறை நாம் ஏற்ற நேரத்தில் கிருபாசனத்தண்டைக்குப் போகும்படி நமக்கு ஆலோசனைகள் வழங்குவதற்கு நாம் ஜெபங்களை ஏறெடுக்கலாம். ஒவ்வொரு வெற்றிக்குப் பிறகும், நம்மை நாம் உயர்த்தாதபடிக்கு தாழ்த்திக்கொள்வதற்கும், மேட்டிமையான சிந்தை கொள்ளாமல் இருப்பதற்கும், அடுத்து சாத்தானின் வஞ்சகமான சோதனையை கவனிப்பதற்கும் நாம் ஜெபிப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படுகிறது. சத்தியத்திற்கு நாம் ஒவ்வொருமுறையும் ஊழியம் செய்யும்போதும், அப்படிப்பட்ட வாய்ப்புகள் மேலும் கிடைத்து, அதை ஞானமான முறையில் பிரயோஜனப்படுத்திக்கொள்ளவும் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுப்பதற்கு ஜெபிக்க வாய்ப்புகள் கிடைக்கிறது.

நீங்கள் மேற்கொள்ளத்தக்கதான சோதனைகள் வந்தபின், பொறுமை, அனுபவம், சகோதர அன்பு, இரக்கம் மற்றும் பல நல்ல குணங்கள் உங்களுக்குள் அதிகரிக்கும்போது, தேவன் கொடுத்த தெய்வீக கிருபைக்காகவும், உதவிகளுக்காகவும் களிகூர்ந்து அவருக்கு நன்றிகளை ஏறெடுங்கள். உங்கள் சோதனைகள் உங்களால் சுமக்கமுடியாத அளவு பாரமாக இருந்து, உங்களை நசுக்கிப்போடும் என்று நீங்கள் எண்ணினால், பாரம் சுமக்கிறவரிடத்திற்கு அதை கொண்டுபோங்கள். நீங்கள் நன்மைகளைப் பெறும்படி எதை சுமக்கவேண்டும் என்பதையும், உங்களுக்கு நன்மையை ஏற்படுத்தாத காரியங்களை எவ்வாறு அகற்றுவது என்றும் உங்களை சேதப்படுத்துவது எது என்றும் அறிந்துகொள்வதற்கு அவரிடத்தில் உதவி கேளுங்கள். நீங்கள் உங்கள் முழு மனதோடு ஆண்டவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று விரும்பினால் - “சபை கூடுதலை மறந்துவிடாதீர்கள்”. நீங்கள் காரணமின்றி உங்கள் வழிகளில் தடுக்கப்பட்டு, அதை மேற்கொள்ள உங்களால் முடியாமல் போனால், தேவனிடத்தில் ஜெபத்தில் தெரிவியுங்கள். அதற்கு பின் உங்களுடைய ஜெபத்திற்கு இசைவாக கிரியை செய்து காத்திருங்கள், வெகு சீக்கிரத்தில் தெய்வீக வல்லமை உங்கள் சார்பில் செயல்படுவதை நீங்கள் உணரலாம். ஒரு உண்மையான சகோதரன் சோதனையிலோ, வேறு எந்த அபாயத்திலோ அகப்பட்டதை நீங்கள் கண்டால், உங்கள் இருதயம் சகோதர அன்பினால் நிரம்பி வழியட்டும். அவரை விடுவிப்பதற்காக நீங்கள் வேகமாக செயல்படுவதோடு, அவரை விடுவிக்கும் வரை அல்லது அவரை மீண்டுமாக இடுக்கமான பாதையில் வழிநடத்தும் வரை அவருக்காக நீங்கள் கிருபாசனதண்டையில் ஏறெடுக்கும் ஜெபங்கள் தொடர்ந்து ஏறெடுக்க வேண்டும். நீங்கள் குறைவுள்ளவர்களாக இருந்தாலும், உங்களுடைய ஜெபங்களும், முயற்சிகளும் ஆசீர்வதிக்கப்பட்டு நீங்கள் நன்மையடைய வழிவகுக்கும். இந்த நற்செய்தியை அறிவிப்பதற்குப் பற்றி எரிகிற வைராக்கியம் உங்களுக்குள் இல்லாவிட்டால், தேவனிடத்தில் விசுவாசத்தோடு ஜெபியுங்கள், அவைகளை நீங்கள் பெறக்காத்திருங்கள். சீக்கிரத்தில் பெற்றுக் கொள்வீர்கள். உங்களுக்கு சுவிசேஷத்தின் மேல் அதிகமான அன்பும், வைராக்கியமும் இருந்தும் அவைகள் அறிவிக்க உங்களுக்கு வல்லமையில்லாதிருந்தால், தேவனிடத்தில் ஜெபியுங்கள். உங்களுக்கு சத்தியத்தை அறிவிக்க வாய்ப்பில்லை என்றாலும் ஜெபியுங்கள், நீங்கள் பெற்றிருக்கும் சின்னசின்ன வாய்ப்புகளை சந்தோஷத்துடனும் மனத்தாழ்மையோடும் பயன்படுத்துங்கள். தேவன் அதிகமான வாய்ப்புகளை உங்களுக்குக் கொடுப்பார்.

வாக்குவாதங்கள் இருந்தால் அல்லது உங்கள் குடும்பத்தினருக்கு, சகோதரர்களுக்கு பாரமான மற்ற தீய பழக்கவழக்கங்கள் இருந்தால், அவைகளைத் தேவனிடத்தில் ஜெபத்தில் ஏறெடுங்கள். இந்தப் பழக்கங்களை மேற்கொள்ள

வல்லமையைக் கேளுங்கள். இதற்கு இடையில் உங்கள் ஜெபங்களுக்கு இசைவாக அந்தப் பழக்கங்களிலிருந்து விடுபட நீங்கள் கடும் முயற்சி செய்யுங்கள். நீங்கள் ஞானத்தில் குறைவுள்ளவர்களாக இருப்பதால் தேவனுடைய காரியங்களைச் செய்வதிலும், சத்தியத்தின் ஊழியங்களிலும் நீங்கள் தோல்வியடைந்தால் “உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்” (யாக் 1:5) என்ற வாக்குத்தத்தத்தை நினைவுப்படுத்திக் கொண்டு தேவனிடத்தில் முறையிடுங்கள்.

உங்கள் அஜாக்கிரதையினால் அல்லது மிகுந்த இரக்கத்தினால் அல்லது தவறானத் தீர்ப்பினால் உங்களுடைய தொழிலில் ஏதேனும் பிரச்சனைகளா? இது உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியைப் பாதிப்புக்குள்ளாக்குகிறதா? தேவனுடைய கிருபாசனத்தண்டையில் இதைக் குறித்து நீங்கள் ஜெபிப்பது மிகவும் ஏற்றதாக இருக்கும். உங்களுக்கு எந்த வழியிலிருந்து விடுதலை வரவேண்டும் என்ற கட்டளையை நீங்கள் கொடுப்பதற்குத் தகுதியற்றவர்களாக இருந்தாலும், அந்தச் சூழ்நிலையில் நீங்கள் ஞானமாக செயல்படுவதற்கு ஏற்ற வழி நடத்துதலை நீங்கள் கேட்கலாம். அப்பொழுது உங்களுடைய ஞானத்திற்கு மேல் தேவனுடைய ஞானம் செயல்பட்டு நீங்கள் எதிர்பார்த்ததை விட நல்ல முடிவுகளைக் கொடுக்கும்.

(**b**) அறிவில் வளர்ச்சியடைய வேண்டும்

**R3136 (col. 1 P5): -**

“அனைவரிடமும் பொறுமையாயிருங்கள்” என்ற காரியம் தேவனுடைய ஜனங்கள் மத்தியில் தேறினவர்கள் மற்றவர்களிடம் பொறுமையாக இருக்கவேண்டும் என்று குறிப்பிடுவதைப் போல் தோன்றுகிறது. ஆனால் அனைவரிடமும் நாம் நீடிய பொறுமையோடிருக்க வேண்டும். “உங்களுக்கு பொறுமை மிக அவசியம்” என்று அடிக்கடி வேத வசனங்கள் குறிப்பிடுகிறது. நாளுக்கு நாள் வளரக்கூடிய தேவனுடைய பிள்ளைகள் இதன் உண்மையைப் புரிந்துகொண்டு, பொறுமை கிறிஸ்துவின் சிறந்த குணங்களில் முக்கியமான ஒன்று எனப்புரிந்துகொள்வார்கள்.

(1) ஞானத்தில் வளர்ச்சியடைவது நமக்குள் பொறுமையை அதிகரிக்கும், நாம் பரலோகப் பிதாவின் பொறுமையை அறிந்துகொள்ளும்போது, நாமும் மற்றவர்களிடத்தில் இந்த குணத்தை அதிகதிகமாகப் பயன்படுத்த உதவிசெய்யும்.

(2) இந்த முழுமனுக்குலத்திற்கு மேல் வந்திருக்கும் மிகப் பெரிய அழிவை நாம் உணரும்போது அதாவது நம்முடைய விழுந்துபோன நிலைமையையும், அதனால் ஏதோ ஒரு வகையில் அனைவர் மேலும் வந்த பாதிப்புகள் - நம்மை இந்த மனுக்குலத்தின் மேல் மனதுருகச்செய்கிறது. குறிப்பாக விசுவாச வீட்டாரிடம் இது உண்மையாகக் காணப்படுகிறது. ஏனெனில் நாம் மற்றவர்களைவிட குறைவானவர்களாக இருந்த போதிலும், தேவனிடத்தில் விசேஷித்த அழைப்பைப் பெற்றிருக்கிறோம். தேவன் எப்படிப்பட்டவர்களை அழைத்திருக்கிறார் என்பதை நாம் முதலில் உணர்ந்து அவர் விரும்புகிறபடி அவருக்கு இசைவாக செயல்படுவதில் கவனமாக இருக்க வேண்டும். அதாவது கிறிஸ்து இயேசுவின் பாதையில் நடக்க அழைப்பு பெற்ற யாவரையும் அந்தப் பாதையில் நடத்த நம்மால் முடிந்தவரைக்கும் முயற்சிக்க வேண்டும். இந்த விசேஷ பணிக்கு நமக்குள் பொறுமை இருக்கவேண்டும். ரோமர் 14:15. 1 கொரி 8:11

(**c**) நம்முடைய விசுவாசத்தை அதிகரிப்பதன் மூலம்

**R3245 (col. 1 P6): -**

“பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது” என்றும் “விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்றும், நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.” என்று அப்போஸ்தலன் விவரிக்கிறார். பொறுமையினால் அநேக நல்ல குணங்கள் வளர்ச்சியடையும் என்று ஆதாரத்தோடு நிரூபிக்கப்படுகிறது. தேவனுடைய ஜனங்களுக்குள் பொறுமையானது, விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். மேலும் பொறுமையில் அளவு, நமக்குள்ளிருக்கும் விசுவாசத்தின் அளவை எளிதில் கணித்துவிடும். எப்போதும் பதற்றமாகவும், அமைதியற்ற மன நிலையையுடைய கிறிஸ்தவர்கள் விசுவாசம் இல்லாதவர்கள். அவருக்குள் விசுவாசம் இருந்தால், தேவனுடைய வாக்குறுதிகள் மேல் நம்பிக்கை வைத்துப் பொறுமையாகக் காத்திருப்பார்கள். எந்த சூழ்நிலையிலும், நமக்களிக்கப்பட்ட பொறுப்புகளை நாம் முடித்துவிட்டு, சகலத்தையும் தேவனிடத்தில் ஒப்படைத்துவிட்டு, பொறுமையோடு தேவனுக்காக காத்திருக்கவேண்டும்.

(**d**) தேவனுடைய திட்டத்தின் காலங்களுக்குரியவைகளை அறிந்து கொள்ளுவதின் மூலம்

**R2155 (col. 1 P5): -**

நான்காவது கூடுதலான காரியம் *ஶி* பொறுமை. நன்மையான எந்தக் காரியத்தையும் பூரணப்படுத்துவது - காலம். காலத்திற்கு முன் பறிக்கப்படும் பழங்கள் பழுக்காமல், கடினமாகவும், கசப்பாகவும் இருக்கும். ஆனால் ஏற்றக்காலம் நிறைவேறும்வரை அதற்குத்தேவையான உரம், தண்ணீர் மற்றும் அனைத்தையும் கொடுக்கும் பட்சத்தில் ருசியுள்ள பழுத்தப்பழங்களைப் பறிக்கலாம். அதே போல் தேவனுடைய திட்டங்களும் நோக்கங்களும் அமைந்திருக்கிறது. தேவனுடைய ஆழமான திட்டங்கள் மிகப்பொறுமையாக கிரியை செய்யும். உலகில் இருக்கும் அரசாங்கத்திற்கு மட்டுமல்ல ஒவ்வொரு சிருஷ்டிகளின் இருதயத்திலும் இப்படியாகவே நடக்கும். தேவன் அனைத்துக் காரியங்களையும் அவருடைய அனந்த ஞானத்தின்படியும் வகையறுக்கப்பட்ட நீதியின் சட்டத்தின்படியும் செயல்படுகிறார். பொறுமையற்ற நிலையில் நாம் இதை அனுபவிக்க வேண்டும் என்றால் அது பழுக்காத, கசக்கக்கூடிய கடினமான காய்களைப் புசிக்கக்கூடிய மதியீனமான செயலாக இருக்கும். ஆனால் பொறுமையோடு காத்திருப்பவர்களுக்கு தேவன் பக்குவமாக அதை கொடுத்தால் அது எவ்வளவு இன்பமாக இருக்கும். ஆகவே பொறுமை பூரணமாக கிரியை செய்யும் வரையில் தேவனுடைய குறித்த காலத்திற்காகக் காத்திருப்போம். தேவனுக்குள் இளைப்பாறுவோம். கர்த்தருக்குக் காத்திருப்போம். அவருடைய வேலைக்காகக் காத்திருப்போம், நம்மைக் குறித்தும் மற்றவர்களைக் குறித்தும் அவருடைய சித்தத்தைத் தெரிவிக்கும் வரையில் பொறுமையோடு காத்திருப்போம். தேவன் மேல் விசுவாசம் வைத்தோர் என்றுமே குாப்பமடையமாட்டார்கள்.

**R2792 (col.2 P4): -**

உண்மையில், இப்படிப்பட்ட ஆவி கிறிஸ்துவ மண்டலத்தில் வளரவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாம். கடந்த காலத்தில் வாழ்ந்தவர்கள் ஓரளவுக்கு நற்குணங்களோடு இருந்ததினால், சீர்பொருந்துதலின் காரியங்களை அவர்களே தங்களுடைய சொந்த முயற்சியினால் செய்திருந்தால் இந்த உலகம் சீர்த்திருந்தியிருக்கலாமே என்று எண்ணலாம். ஆனால் தேவனுடைய வார்த்தைகளை நீடிய பொறுமையோடு

காத்துக்கொள்பவர்கள், சர்வ வல்லவரிடமிருந்து ஞானத்தைப் பெற்றவர்கள் குறித்தக் காலத்தில் தேவனுடைய திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்பதையும், தேவன் எதிர்பார்க்கக்கூடிய நீடிய பொறுமையில் வளர்ந்துக்கொண்டிருப்பார்கள். இந்தப் பொறுமையில் வளர்ச்சியடைந்தால், நம்முடைய ஆண்டவர் தீமையையும் அதின் பாதிப்புகளையும், தவறுகளையும் அதன் உபத்திரவங்களை சந்தோஷமாகவும், நீடிய பொறுமையோடும் சகித்தது போல நாம் இருக்கவேண்டும். ஏனெனில், தேவன் இவையனைத்தையும் அனுமதித்ததோடு மட்டுமல்ல, அவர் சகலத்தை, தேவனுடைய இராஜ்யத்தில் கிறிஸ்துவோடுக்கூட ஆயிர வருஷம் ஆட்சி செய்யும் "சிறுமந்தையை" அவர் அழைத்து ஆயத்தம் செய்துக்கொண்டிருக்கும் மிகப் பெரிய நன்மையான நோக்கத்திற்காகவே செயலாற்றுகிறார் என்பதையும் உணர்ந்துக் கொள்ளலாம்.

------------------------